599

# அன்னை





ஜார்ஜ்கோமகன்

வைரம் பதிப்பகம்

# அன்னை

ஜார்ஜ் கோமகன்

வைரம் பதிப்பகம்
50, பெல்ஸ் சாலை
சென்னை-5.

முதற் பதிப்பு : அக்டோபர் 1970

[அனைத்துரிமையும் பதிப்பகத்தார்க்கே]

விலை ரூ. 1-50

599
76790

சத்யா அச்சகம், சென்னை-14.

# வணங்குகிறேன் !

" நமது அண்ணன் பேரறிஞர் அண்ணு தமிழர்தம் தலைவனுகயிருந்து, தமிழ்த் தெய்வ மாகிவிட்டார் !

அவர் ஓர் நறுமண மலர்ப்பூங்கா அமைத்தார். அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

அந்தப் பூங்காவில் பல மலர்கள்—வண்ண மலர்கள்; மண மலர்கள் ! அனைத்தும் தமிழ் வையக மாந்தர்களுக்கு நேசமுள்ள பாச மலர்கள் !

அண்ணனின் காலடியிலுள்ள பூஜைக்குரிய மலர்கள் !

அந்த மலர்களில் நல்ல இடத்தில் பதியம் போட்டுப் பந்தலிட்டு வளர்த்த கொடி மலர் தான் பழந்தமிழ்க் குடிமகள்—திருமகள்—

அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் !"

அன்னையின் பிறந்தநாள் விழாவின்போது மிகச் சிறப்பான முறையில் வெளியிடப்பட்ட பிறந்தநாள் விழா மலரில் மலர்க்குழுத் தலை வன் என்ற முறையில் இப்படி எழுதினேன்.

அண்ணனின் வளர்ப்பில் வளர்ந்த கொள்கை மலரான நமது அன்னையின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சுருக்கமாகப் பிறந்தநாள் மலரில் எழுதினேன்.

அந்தக் கட்டுரையைப் புத்தகமாக்கித் தரு கிறார் எனது கெழுதகை நண்பர்; பழகுதற்கு இனியவர், திரு. எஸ். வடிவேலு அவர்கள் (வைரம் பதிப்பக உரிமையாளர்).

இந்நூல் வெளிவரக் காரணமானவர்களில் மிக முக்கியமானவர்கள்—

எனது அருமைச் சகோதரரும் கழக முன்னணிப் பேச்சாளரும் தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் நலவுரிமைக் கழகப் பொதுச் செயலாளருமான தோழர் இளம்பரிதி அவர்களும் ஓவியர் முத்து அவர்களுமாவார்கள்.

என்னால் திட்டப்பட்ட "அன்னையின் வாழ்க்கையில் அரிய நிகழ்ச்சிகள்" என்ற கட்டுரை நூல் வடிவில் வந்துவிட்டது; நெஞ்சம் பூரிக்கிறது!

அன்னை என்னை வாழவைக்கும் தெய்வம்! அவரது குடும்பத்தோடு இளவயது முதற்கொண்டு இரண்டறக் கலந்தவன் நான், இன்னும் பல நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தரவேண்டுமென்ற ஆசைதான். இப்போது என்னால் அது முடியவல்லை. முடியும் என்று நம்புகிறேன். அடுத்த ஒரு சந்தர்ப்பத்தில்!

இந்நூலில் எனது கட்டுரையோடு சகோதரர் இளம்பரிதி அவர்களின் உணர்ச்சி மிக்க கட்டுரையும் 'அன்னை'யின் சிறப்பியல்புகளை விளக்கும் கவிஞர்களின் கவிதைகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இணைப்பு — நூலை எழிலாக்கியிருக்கிறது; எண்ணத்தில்!

மிக மிகக் குறுகிய காலத்தில் மெத்த சிரமம் எடுத்து நூலை வெளியிட்ட வைரம் பதிப்பகத்தாருக்கு எனது நெஞ்சுநிறை நன்றி!

அன்னையை வணங்குகிறேன்!

அன்பர்களின் பார்வைக்கு இந்நூலைப் படைக்கிறேன்.

நன்றி; வணக்கம்,

அன்பன்,

ஜார்ஜ் கோமகன்



அண்ணனும் தங்கையும்



இந்திராகாந்தியும் அன்னையும்



உலகம் பல உன்னதத் தலைவர்களைக் கண்டிருக்கிறது. வையக வரலாற்றில் 'தத்துவ முத்திரை'யைப் பொறித்த பல அரசியல்—பொருளாதார, சமுதாயத் தலைவர்கள் 'மக்கள் இதய மகுடதாரிகளாக' ஒளிவீசி யிருக்கிறார்கள்; உண்மை! அவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கங்கள் வெற்றி முனைகளைத் தொட்டிருக்கின்றன; மறுக்கவில்லை!

இவை அனைத்துக்கும் மேலாக—வையகம் காணாத, வரலாறு சந்திக்காத ஓர் 'அதிசயம்' தென்னகத்தில் நிகழ்ந்திருக்கிறது. அதை நிகழ்த்திக் காட்டியவர் இன்று வங்கக் கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் தூயவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான்!

என்ன அந்த அதிசயம்? புனிதன் செய்த அந்தப் புதுமைதான் என்ன? எஃகு நரம்பும், இடைவிடா குருதி ஓட்டமும், பீடு நடையும், பெருமித நோக்க

மூங் கொண்ட ஆயிரமாயிரம் ஆக்கநல் இளைஞர்களை 'குடும்பப் பாசம்' எனும் கூட்டுக்குள் பாசக் கயிற்றால் இணைத்துக்கட்டி ஒரே குடும்பமாக ஆக்கி—அந்தக் குடும்பத்தின் ஒரே அண்ணனாக, தென்னகத்தின் மன்னனாக ஒளி வீசினார்; நீங்காத் துயில் கொண்டிருக்கும் இப்போதும் மக்கள் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றிருக்கும் அறிஞர் அண்ணா அவர்கள்.



திராவிட முன்னேற்றக்கழகம்—ஓர் அரசியல் கட்சிதான்—'இல்லை'யென இயம்பவில்லை. ஆனால்—அந்தக் கட்சியை வெறும் 'வறட்டு அரசியல் வெறி" யோடு வளர்க்காமல் பசுமையான நெஞ்சங்களில்

பாசவுணர்ச்சியை உருவாக்கிக் குடும்பக் கழகமாக மாற்றினர் அண்ணு—இதையும் மறுக்க முடியாது 'மனம்' உள்ள எவரும்!

அண்ணு கொள்கைத் தலைவன் மட்டு மல்ல நம் குடும்பத் தலைவன்! அண்ணனுக்கு ஆயிரமாயிரம் தம்பிமார்கள்; தங்கைகள்!



அந்த அன்புத் தங்கைகளில் தலைமகள்—அண்ணனின் பாச நெஞ்சில் நிறைந்திட்ட பண்புமகள்—அவர் விரல் காட்டிய திக்கில் சென்று வெற்றிநடை போட்டுவரும் வீரமகள்—பழங்குடி குலமகள்—அவர் தான் இன்றைய தமிழக வேளாண்மை, அரிசன நலத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் சத்திய வாணிமுத்து அவர்கள்!

**அண்ணனின் தங்கை—இன்று 'அன்னை'யாக ஒளி வீசுகிறார்; நல்லவர் நெஞ்சங்களில்!**

1923-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ம் நாள் சென்னைக் கடுத்த செங்கற்பட்டில்—'காஞ்சித் தலைவன்' தோன்றிய அம் மாவட்டத்தில்-செங்கற் பட்டு நகரத்தில் பிறந்தவர்தான் அன்னை சத்திய வாணிமுத்து அவர்கள்.



சத்தியத்துக்காகப் போராடும் அறமகளாக விளங்கவேண்டும் என்பதற்காகவோ—விளங்குவார் என்பதற்கு முன்னறிவிப்பாகவோ என்னவோ 'சத்தியவாணி என்ற பெயரிட்டனர்—அவரது பெற்றோர்கள்!

தந்தை நாகை நாதர்! தாயார் ஜானகியம்மாள்

போதி சத்துவனும்—தத்துவ வித்தகனும் புத்தர் பிரானின் அருளறத்தை வாழ்வில் ஏற்றுக் கொண்ட இந்தத் தம்பதிகளின் மகளாகப் பிறந்தார் அன்னை சத்தியவாணிமுத்து.

அம்மையாரின் பள்ளி வாழ்க்கை செங்கற்பட்டு கொலம்பஸ் உயர்நிலைப்பள்ளி, கேரள மண்ணிலுள்ள எர்ணுகுளம் புனித தெரசா கான்வெண்ட்—ஆகிய கல்விக் கூடங்களில் துவங்கி--சென்னை எழும்பூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி வரை தொடர்ந்து முற்றுப் பெற்றது,

இவர் ஒரு டாக்டருங்கூட; ஹோமியோபதி வைத்தியத் துறையில்!

சமுதாயத் தொண்டும்—தன் மதிப்பு இயக்கப் பற்றும்—புத்தர் அருளற வழியும் கொண்ட இவரது தந்தை நாகை நாதரிடம் விளக்கங்களும், போதனைகளும் பெற்ற டாக்டர் அம்மையார் இளவயதிலேயே-சமுதாயப் புண்ணை ஆற்றுகின்ற அறிவியக்க-லோகாயுத வாத தெளிவுபெற்ற டாக்டராக விளங்கினர்!

இவரது மணவிழா 1943ல் நடைபெற்றது; சென்னையில் தொழிலாளர் தந்தையும், தமிழ்ப் பெரியாருமான திரு. வி. க. தலைமையில்—சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையும், மற்றவர்களும் கலந்து கொள்ள சுயமரியாதை இயக்க வீரர்-ஈரோட்டுப் பாதையில் முன் நடைபோட்ட ஏற்றமிகு செயல்

தீரர் திரு எம். எஸ். முத்து அவர்களைக் கைபிடித் தார்; கணவராக!

பிறந்த குடி-பகுத்தறிவுப் பாதைகண்ட பெரு மைக் குடி!

புகுந்த குடியும்-அறிவியக்க வீரனைத் தலைவனா கக் கொண்ட புகழ்க்குடி! அன்னை 'பாக்யசாலி' அல்லவா?

பிறந்த குடியும்-புகுந்தகுடியும் பகுத்தறிவுக்குடி களாக அமைந்துவிட்டதால் சுயமரியாதை 'கொள் கைக் கொடி' உயர்த்தும் பணியில் தன்னை ஈடுபடுத் திக் கொண்டார் அன்னை.

தந்தை பெரியார் கண்ட திராவிடர் கழகம்- இந்த நாட்டில் மண்டிக் கிடந்த அறியாமை இருளை அகற்ற முனைந்து பணியாற்றியது. வருணாசிரம இந்து மதம் வகுத்துவிட்ட சாதீய பாகுபாட்டால்– தீண்டாமை எனும் பெருநெருப்பில் விழுந்து துடிதுடித்துக் கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விழிப் புணர்ச்சியை உருவாக்குவதிலும்– சாதிய ஆணிவேரும் வருணாசிரமத்தைக் கல்லி எறிவ திலும் பாடுபட்ட திராவிடர் கழகத்தில் தன்னை ஈடு படுத்திக்கொண்ட அன்னையார் திராவிடர் கழகத் தில் செயற்குழு உறுப்பினராக 1943-முதல் 1949 வரை தொடர்ந்து பணியாற்றியிருக்கிறார்.

தந்தையின் திருமண முறையால் மனமுடைந்து- திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி புதிய

அவைப்பை— திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்டபோது-திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய முன்னணித் தலைவர்களில் அன்னையும் குறிப்பிடத் தக்கவராவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உருவாக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் பிரதிநிதியாக மட்டுமின்றி; மகளிர் குலத்தின் பிரதிநிதியாகவும் அன்னை விளங்கினார்,

அண்ணன் கண்ட குடும்பக் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க முதல் அதன் செயற்குழுவிலும், பொதுக் குழுவிலும் அன்னையார் தொடர்ந்து உறுப்பினராக இருந்து வருகிறார்.

அண்ணனது கட்டளையை ஏற்று-கழகத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டு; கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று பன்முறை சிறை புகுந்திருக்கிறார் அன்னை டாக்டர் சத்திய வாணி முத்து அவர்கள்.

கட்டாய இந்தியை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களில் "ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்-நீ தேடிவந்த கோழையுள்ள நாடு இதல்லவே" என்று குரலெழுப்பி-புறநானூறு கண்ட வீரமகளாக "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை-எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" யெனச் சிறைத் தண்டனை களைச்சிரித்த முகத்துடன் ஏற்றுச் சிறை வாழ்வைத் தவவாழ்வாக அனுபவித்திருக்கிறார் அன்னை.

மும்முனைப் போராட்ட நேரத்தில் 'கர்ப்பிணி' யாக இருந்தார் அன்னை; அண்ணா அவர்களும்-மற்றைய நான்கு தலைவர்களும் ஆக ஐவர்—கைதான போது அன்னையைத்தான் போராட்டத் தளபதியாக நியமித்துவிட்டு அண்ணனும், மற்றத் தலைவர்களும் சிறைக்குச் சென்றனர்.

அப்போது...கர்ப்பிணியாக இருந்த போதே கைது செய்யப்பட்டார் காங்கிரஸ் ஆட்சியால்; காராக் கிரகத்துக்குள் தள்ளப்பட்டார்! விலைவாசிப் போராட்டத்திலும் பங்கு கொண்டார்; கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

பன் முறை சிறை வாழ்வு; குடும்ப வாழ்வையும், குழந்தைகளின் எதிர்கால வாழ்வையும் கண் காணிக்க வேண்டிய அன்னைக்கு! என்றாலும் கலங்கினாரில்லை: எத்தகைய இன்னல்கள் வரினும் ஏற்றுக் கொண்டு இயக்கத்துக்காக தன்னை ஒப்படைத்தார்!

அண்ணனின் நெஞ்சில் நிறைவான இடத்தைப் பெற்றார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் கொள்கை பரப்புச் செயலாளராகப் பணியாற்றினார். 1967ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கழகம் வெற்றியின் அத்தாணி மண்டபத்தை எட்டிப் பிடிப்பதற்குத் தீவிரமான பிரச்சாரம் மிக முக்கிய காரணமாகும். அன்னையின் கொள்கை பரப்பும் பணி—கழகம் அரசு கோபுரத்துக்குள் நுழைவதற்கு ஒரு காரணமாகும்.

சலியா உழைப்பு; அரிய குண நலன்; பிறந்த குடியை உயர்த்தும் போராட்ட எண்ணம்; தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை உயர்த்துவதற்கான இடையறு பணிகள்; கழகத் தோழர்களிடத்தும்—மக்களிடத்தும் இன் முகத்தோடு உரையாடும் இனிய பண்பு—இத்தகைய சிறப்பியல்புகளால் தமிழக மக்களிடையே தனிச் செல்வாக்குப் பெற்று விளங்குகிறுர் அன்னை.

சமுதாயத்தால் தள்ளப்பட்டு, வாழ்வில் பின் தங்கியுள்ள மக்களால் ''அன்னை'' என்று அன்பொழுக அழைக்கப்படும்அன்னை ''அன்னை'' என்றஇதழின் ஆசிரியராக இருந்து இலக்கியச் சேவையும்—இயக்க எழுத்துப் பணியும் புரிந்திருக்கிறுர்.

அன்னை டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் பல உரை நடை நூல்கள் யாத்திருக்கிறுர். அதில்— ''எரிக்கப் பட்டாள்'' என்ற ஜோன்-ஆப்-ஆர்க்கின் வாழ்க்கை வரலாற்று நூல் குறிப்பிடத் தக்கதாகும்.

சிறந்த பேச்சாற்றலும்—எழுத்தாற்றலுங் கொண்ட அன்னை, 1957ல் கழகம் முதன் முதலில் தேர்தல் களத்தில் இறங்கியபோது சென்னை பெரம்பூர் 'ரெட்டை மெம்பர்' தொகுதியில் கழக வேட்பாளராக நின்று பெருவாரியான வாக்குகளால் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுர். எதிர்க் கட்சி வரிசையில் 'தனிப் பெண்ணுகத் திகழ்ந்து—அன்றைய ஆளும் கட்சியினரும் பாராட்டும் வண்ணம் சிறந்த 'பார்லிமெண்டேரி' எதிர்க்

சட்சி உறுப்பினராக—வாதத்தில் வல்லவராக ஒளி வீசினூர்!

1967ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் அதே பெரம்பூர் சட்ட மன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றூர்; அண்ணனின் அமைச்சரவையில் பதவியேற்ற முதற்பெண் அமைச்சர் அன்னை சத்தியவாணி முத்து அவர்கள் தான்!

இவரது பொதுவாழ்வின் மணி விளக்குக்குத் தூண்டு கோலாகத் திகழ்ந்த-இவரது கணவர் திரு எம். எஸ். முத்து அவர்கள், அன்னை, அமைச்சராகி—ஏழைகள் வாழ்வு செம்மையுற-திட்டங்கள் வகுத்து—சட்டங்கள் ஆக்கிப் பணியாற்றுவதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ச்சியடைய வையகத்தில் இல்லை! அமரர் அண்ணு அவர்களின் அமைச்சரவையில் (1967-1969) அரிசன நலம், தகவல் ஒலிபரப்பு இலாகா ஆகியவைகளின் அமைச்சராகவும், பின்னர் காவியக் கலைஞர் அமைச்சரவையில் பொது நலத்துறை இலாகா (1969 பெப்ரவரி முதல் ஆகஸ்டு வரை). அமைச்சராகவும், தற்போது அரிசன—சுற்றுலா இலாகாவோடு-மகளிர் நலம், குழந்தை நலம், விவசாயம், மீன் வளத்துறைகளின் அமைச்சராகப் பணியாற்றுகிறூர் அன்னை.

தகவல் ஒலி பரப்பு அமைச்சராக இருந்தபோது 'ஆகாஷ் வாணி'யை 'வானொலி'யாக மாற்றிச் சாதனை புரிந்தார்!

அரிசன நல இலாகாவில்—காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டு வந்த அரிசன மாணவர்களுக்குரிய உபகாரச் சம்பளத்தை உயர்த்தி—அவர்களுக்கு ஆடைகள் வழங்கவும் ஏற்பாடு செய்தார். அரிசன சமுதாயத்திலுள்ளோர் வியாபாரங்கள் செய்ய கடன் தொகை வழங்கும் திட்டத்தை தந்து செயல்படுத்தி வருகிறார்.

விவசாயத் துறையில் பசுமைப் புரட்சி—அன்னையின் செயற் புரட்சி!

தமிழ் நாட்டின் கலை—பண்பாடு—ஆகியவை களைப் பரப்பவும், அயல் நாடுகளில் தமிழகப் பண்பாட்டை வலிவும் பொலிவுமுள்ளதாக்கவும்—தமிழக பண்பாட்டுத் தூதுவராக 1967ம் ஆண்டு மோரீசியஸ் தீவுக்குச் சென்று வந்தார். ஐரோப்பிய நாடுகளின் அன்பழைப்பை ஏற்று-அங்குள்ள மகளிர் ஏற்றமிகு வாழ்வு கண்டு-அத்திட்டத்தைத் தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறார்.

மகளிர் நலத் துறை அமைச்சராகவும் இருக்கிற அன்னையார் அவர்கள்-தி. மு. கழகத்தில் 'மகளிர் மன்றம்' கண்ட அம்மையாராவார்கள்.

தாழ்த்தப் பட்ட மக்களின் உயர்வுக்காகப் பணியாற்றும் அன்னை, தமிழகத் தாழ்த்தப்பட்டோரின் தனிப் பெருந் தலைவியாவார்கள்!

"நல்ல குடும்பம்-ஓர் பல்கலைக்கழகம்" என்றார், பாவேந்தர். அந்த 'நல்ல குடும்பம்' தான் அன்னையின் குடும்பம், அக் குடும்பத்தின் தலைவி—அன்னை.

அறச் செல்வன், சித்திர முகி, மரகத மணி, செழியன் என்ற செல்வங்களின் தாயான இவர்—'எழிலன்' என்ற மழலைக்குப் 'பாட்டியாக'வும் ஆகி விட்டார்!

அறச் செல்வன் என்ற பெயர் கொண்ட தன் தலை மகனுக்கு காந்திமதி என்ற செல்வியையும்,

சித்திர முகிக்கு-இரவணதாஸ் என்ற செல்வனையும்,

மரகதமணிக்கு–சாயி கிருஷ்ணன் என்ற செல்வனையும் மணமுடித்து வைத்து மகிழ்ந்த அன்னை அறச் செல்வன்-காந்திமதி பெற்றெடுத்த குழந்தைச் செல்வமான 'எழிலனை' எடுத்தணைத்துக் கொஞ்சுவதிலே இன்பங்காணுகிறார்.

அன்னை டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் குடும்பத் தலைவி மட்டுமல்ல; கொள்கைத் தலைவி; தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் குலத்தலைவி; மகளிர் தலைவி!

மாண்புகள் நிறைந்த மகளிர் திலகமே—நீ வாழ்க, பல்லாண்டு என வாழ்த்துகிறோம்.



# அன்னையின்
# வாழ்க்கையில்
# அரிய நிகழ்ச்சிகள்

**அண்ணாவின் 'கன்னி'ப் பேச்சு !**

1943-ம் ஆண்டு சனவரித் திங்கள் 17-ம் நாள் சென்னையில் தமிழ்ப் பெரியார், தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் தலைமையில் புரோகித மற்ற திராவிடத் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருமணத்தில் மணமகனும் மணமகளும் அமர்ந்திருக்கின்றனர். மணக்கோலம் பூண்டிருக்கிற மணமகன் அறிவியக்கத்தின் முன்னோடி இளைஞர்களில் வெகு தீவிரமானவர்; தேர்ந்த அரசியல்வாதி, சுயமரியாதை வீரர், மணமகளோ அறிவியக்கத்தில் பங்கு கொண்டு பணியாற்றுகிற பண்புள்ள குடும்பத்தில் பிறந்தவர், மணமகளின் தந்தையாரோ வாதத்தில் வல்லவர்; அவையில் சுவையான சொல் தரக்கூடியவர். இந்தப் பகுத்தறிவுக் குடும்பத்தின் குலமகளைத்தான் தனது இல்லறத் தலைவியாக ஏற்று அவரது கைத்தலம் பற்றினார்' அந்த பகுத்தறிவு இளைஞர்.

திரு வி. க. வின் தென்றல் நடை முகவுரையோடு துவங்கிய திருமண விழா சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்களின் சொல் விளையாட்டால் சுவையேறி முடிவுறுகிறது. திருமணவிழாவில் அறிவியக்கத் தந்தை 'அய்யா'வும் ..தளபதி அண்ணாவும் கலந்து கொள்வதாகயிருந்தது. கோவையில் இராமாயண எரிப்புப் போராட்ட விளக்கக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டிய நிலையேற்பட்டுவிட்டதால். 'அய்யா'வும், அண்ணாவும் திருமணவிழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அவர்களிருவரும்

தங்களது அன்பைக் குழைத்து வடித்துத் தந்த வாழ்த்துச் செய்திகள் விழாவில் வாசிக்கப்பட்டன.

விழா முடிவில், வ. பா. தாமரைக் கண்ணி அம்மையார் வீணை இசைக்க ரத்னமாலா நடனமாடினார். விழாவில் வந்திருந்த பெரு மக்களை மணமகளின் தந்தையார் தனது அன்பு உபசரிப்பால் வரவேற்றுக் கொண்டிருக்கிறார், மகிழ்ச்சிப் பெருக்கால் தன்னை மறந்த நிலையில்.

மங்கல நாணைத்தான்—செல்வன், செல்வியின் கழுத்தில் சூட்டி விட்டாரே; மணவிழா முடிந்து விட்டதே—இன்னும் ஏன் அமர்ந்திருக்கிறார், மணமகள்!

அதோ...! அவரது தந்தையார் 'ஏதோ ஒன்றை' நினைத்துக்கொண்டவராகத் தலையசைக்கிறார்—தன் மகளின் திருமுகத்தை நோக்கி!

உடனே...! பாய்ந்து வரும் அம்பு போல் எழுந்து நின்று...'கீர்த்தி மிக்க தலைவர் அவர்களே!' என்று தன் நாத ஒலியால் அவையோரை அதிசயிக்க வைக்கிறார், மணமகள்! ஆம்...நாணி, கோணி 'நாணல் போல் தலை குனிந்து இருக்க வேண்டிய மணமகள்-தமிழறிஞர்கள் மத்தியில், அவையில் அஞ்சாமல் எழுந்து நின்று நன்றியுரை நவில்கிறார்!

இந்தத் 'திடீர் சம்பவத்தை, அவை மட்டுமன்று; அவரது கைத்தலம் பற்றிய கணவரான 'அந்த இளைஞரே" எதிர் பார்க்கவில்லை!

தலைவனுக்கு இளைத்தவரா தலைவி? பகுத்தறிவு குடும்பத்தில் பண்பட்டுத் திகழ்கிறவர் அல்லவா?

தென்றல் நடை திரு. வி. க. வும்-சொல்லின் செல்வர் சேதுப் பிள்ளையும் பூரித்துப் போயினர்; புளகாங்கித மடைந்தனர். திரு வி. க. அவையோர் முன்னிலையில், மணமகளின் 'கன்னிப்பேச்சை'ப் புகழ்ந்து "இந்த மணமகள் இன்றைய குடும்பத் தலைவி மட்டுமல்ல; நாளைய நாட்டின் தலைவி... தலைவி... தலைவி..." என்று அவருக்கே உரித்தான மும்முறைச் சொல் நடையில் வாழ்த்து முழக்கினார்!

திரு. வி. க. போற்றிப் பாராட்டிய தலைவி—மணக்கோலத்திலேயே தன் தெள்ளிய தமிழ்ப்பேச்சால் அவையை அதிசயிக்க வைத்த வீராங்கனை—யாரென்று கூறவும் வேண்டுமா?

அவர்தான்—தமிழ்மாநிலத்தின் வேளாண்மை—அரிசன நலத்துறை அமைச்சர் அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள்!

அவரது அன்புக் கணவர்தான் அறிவியக்கச் 'சொத்து' மறைந்த எம். எஸ். முத்து அவர்கள்.

அன்னையிடம்—இந்தச் சம்பவம் பற்றிக் கேட்ட போது நகைச்சுவையாகச் சொன்னார்:

"எனது தந்தை நாகை நாதரிடம்-அறிவியக்கச் சம்பந்தமாக—புத்தபிரானது கொள்கைகளை மையமாக வைத்து அடிக்கடி வீட்டில் விவாதிப்பேன்

எனது வாதத் திறமைகளையும்—விஷய விளக்கங்களை நான் அறிந்துகொள்ளும் பாங்கினையும் கண்டு என் தந்தை மிகவும் மகிழ்ச்சியடைவார். இதனை மனதில் வைத்துக்கொண்டு-எனது திருமண நேரத்தில் "வீட்டில் வாதாடுகிறாயே—மேடையில் பேசு பார்ப்போம்" என்றார். "ம்...பேசுகிறேன்—ஆனால்... நான் எப்போது பேசவேண்டும் என்று தாங்கள் கூறவேண்டும்' என்று கூறினேன், "நிகழ்ச்சி முடிவில்—நன்றி கூறு' என்றார். "சரி..." என்றேன்.

நிகழ்ச்சி முடிந்தது...எனக்குக் குறிப்புக் காட்ட வேண்டிய தந்தையோ விருந்தினர்களை உபசரிப்பதில் ஈடுபட்டிருந்தார்...இது மிக நெருக்கடியான நேரமல்லவா? நல்ல வேளை...என் தந்தைக்கு நினைப்பு வந்துவிட்டது. திரும்பித் தலையசைத்தார்—என்னையுமறியாத ஓர் உத்வேகத்தால் உந்தப்பட்டுப் பேசி விட்டேன். அந்தப் பேச்சை திரு வி. க. சேதுப்பிள்ளை போன்ற தமிழாய்ந்த தமிழ்ப் பெருந்தகையாளர்களும் பாராட்டிவிட்டார்கள்.

தந்தை தலையசைக்கவில்லையென்றால்...? என்று கூறிப் புன்முறுவல் பூத்தார் அன்னை!

அன்னையின் பொதுவாழ்வில் 'பொன் நிலைபெற' இந்தக் கன்னிப் பேச்சும் காரணமன்றோ?

'அண்ணனைக் கண்டேன்!'

அதே...1943ஆம் ஆண்டு! அன்னைக்குத் திருமணம் நிகழ்ந்த ஆண்டு. சென்னை அரண்மனைக்

காரன் தெருவிலுள்ள கோகலே மண்டபத்தில் சுய மரியாதை இயக்க மாநாடு!

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர்-அன்னையின் அன்புக் கணவரான திரு எம். எஸ். முத்து அவர்கள்.

இயக்கத்தில் அவர் மட்டுமில்லாமல்-திருமணத் திற்குப் பிறகு தனது துணையோடும் தொடர்ந்து பணி யாற்றினர்.

மாநாட்டின் தலைவர் திருமதி சேலம் கனகம்மை இராமசாமி அவர்கள். மாநாட்டில் தந்தை பெரி யார் அவர்களோடு அறிஞர் அண்ணா அவர்களும்-நாவலர் (அப்போது இளந்தாடி) நெடுஞ்செழியன் அவர்களும், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும்-மற்றும் பல மாணவத் தோழர்களும்-குத்தூசி குரு சாமி அவர்களும் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் மேடையில், பெண்கள் பகுதியில் அன்னை டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களும் அமர்ந்திருந்தார்.

மாநாட்டுத் தலைவரான திருமதி கனகம்மை இராமசாமி அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித் தளிக்க வேண்டிய கட்டம்...! வரவேற்பிதழை ஒரு பெண் வாசித்தளித்தல் சிறப்பு என்று மாநாட்டு நிர் வாகிகளும்-தலைவர்களும் எண்ணினர்.

எந்தப் பெண்ணை அவையின் முன்னிருத்தி வர வேற்பிதழை வாசித்தளிக்கச் செய்வது? மேடை

விருந்த எந்தப் பெண்ணும் முன்வரவில்லை, அவைக் கூச்சம் அவர்களுக்கு!

மேடையில் 'அமர்ந்திருந்த அண்ணனது ஒளி விழிகளில்' அன்னை சத்தியவாணி முத்து அவர்கள் பட்டார்கள்! அருகில் அமர்ந்திருந்த குத்தூசி குருசாமி அவர்களிடம் "யார் இந்தப் பெண்"-அண்ணன் கேட்டார்!



"தோழர் முத்துவின் துணைவி–தோழியர் சத்தியவாணி"–குருசாமி, அண்ணனுக்கு கூறினர்!

அவ்வளவுதான்! வரவேற்பிதழ் அன்னையின் கரத்தில்!...அவரது திருவாய் தேன் தமிழ் வார்த்தைகளை முழக்கியது!

அண்ணன் மகிழ்ந்தார், தன் அன்புத் தங்கையைக் கண்டு கொண்டார்!

அன்னையிடம்–இந்நிகழ்ச்சி பற்றிக் கேட்ட போது...

“அண்ணாவை...எனது அன்பு அண்ணாக அன்றைக்கே நான் ஏற்றுக் கொண்டேன்...அந்த அன்புத் தெய்வம்...அன்புத்தெய்வம்...” என்ற வார்த்தையை முடிக்க முடியாமல் திணறி–கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கினார்!

அண்ணன் “சாரதி” யானார்!

பாரத யுத்தத்தில் வில்லாளனுக்குச் சாரதியானார் கண்ண பரமாத்மா என்று மகா பாரதம் கூறுகிறது, அறிவோம் நாம்!

அன்னைக்கு அண்ணன் சாரதியாகி ‘அற்புதம்’ நிகழ்த்தியிருக்கிறார்!

பலகோடித் தெய்வங்கள் வேண்டாம்–“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்று உணர்த்திய தமிழ்ச் சமுதாயத்துக்கு, அது வணங்கத்தக்க ஒரு தெய்வமாக–தமிழ்த் தெய்வமாக ஆகி, தமிழர்தம் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட அண்ணனைத் தந்த காஞ்சியில்–தமிழ்த் திருநாள்; பொங்கற் புதுநாள் விழா!

விழாவில் கலந்துகொள்ள, பேருந்து வண்டியில் ஏறிக் காஞ்சி வந்தடைந்தனர்–அன்னை டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களும், அவர்தம் கணவரான திரு. எம். எஸ். முத்து அவர்களும். அமரர் அண்ணாவின் கைவண்ணம் பட்டு வாரந்தோறும்

வெளிவந்து கொண்டிருந்த 'திராவிட நாடு' இதழின் அலுவலகம் திருக்கச்சிநம்பி தெருவிலிருந்தது அப்போது!

'சுயமரியாதைத் தம்பதிகளான அன்னை சத்தியவாணி முத்து அவர்களும்-கணவர் முத்து அவர்களும் அண்ணனைக் காண அலுவலகம் சென்றனர். தங்கள் அன்புத் தெய்வத்தைக் கண்டனர்.

அப்போதெல்லாம் அண்ணன் ஒற்றை மாட்டு வண்டியில்தான் செல்வார்! அந்த ஒற்றை மாட்டு வண்டிச் சவாரி அவருக்கு வெகு சுகம்! அவரே அதன் சாரதியும் ஆவார்!

தன் தங்கையையும்-தங்கையின் கணவரையும் கண்டவுடன் அவர்களைத் தனது ஒற்றைமாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு தானே 'சாரதி'யாகி ஓட்டிச் செல்ல வேண்டுமென்ற ஆசை!-அண்ணனுக்கு!

ஆசை...நடைமுறைக்கு வந்தது!

ஆம்-அண்ணன் லுங்கியைக் கட்டிக் கொண்டு தனது அன்புச் சகோதரியையும்-அவரது கணவரையும் தனது ஒற்றைமாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றார்!

இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை வண்டிக்கே சாரதியான அண்ணன்-தனது அன்புச் சகோதரியின் குடும்பத்துக்கும் 'சாரதி' யாவதில் தனி இன்பம் கண்டிருக்கிறார்!

இது குறித்து அன்னையிடம் கேட்டபோது...

"அது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்; கிடைத்தற்கரிய பேறு" என்று கண்ணீர் மல்கக் கூறினர்!

**அன்னைக்குக் கிடைத்த அண்ணலின் பாராட்டு!**

1944ஆம் ஆண்டு! சென்னை, பிராட்வேயிலுள்ள பிரபாத் டாக்கீஸில் சென்னை, பகுத்தறிவாளர் சழகத்தின் (The Madras Rational Society) சார்பாக—அறிவுலக மேதை, ஆதியர்களின் தலைவர் அண்ணல் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு வரவேற்புக்கூட்டம்

அண்ணலைக் காண ஆயிரமாயிரம் தாழ்த்தப் பட்டவர்கள் குழுமியிருக்கின்றனர். கூட்டத்தில் மறைந்த தலைவர் என். சிவராஜ் அவர்கள், முன்னள் அமைச்சர் எஸ். ராமநாதன் மற்றும் பல அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

அண்ணலுக்கு ஆங்கிலத்தில் வரவேற்புரை நிகழ்த்தி வரவேற்புரையை வாசித்தளிக்கும் பொறுப்பினை அன்னை டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களிடம் வழங்கினர், வரவேற்புக் குழுவினர்.

ஆங்கிலப் புலமை பெற்றவரும்-உலக மேதையுமான டாக்டர் அம்பேத்கார் அவர்களின் முன்னிலையில் தெளிவான-அழகான ஆங்கில நடையில் வரவேற்புரை நிகழ்த்தி-வரவேற்புரையையும் வாசித்தளித்தார் அன்னை.

அண்ணல் அம்பேத்காரும்—என். சிவராஜ் அவர்களும் தங்கள் குலக்கொடி, 'கொள்கைக் கொடி'யாகத் திகழ்வதையும் அந்தக் 'சொள்கைக் கொடி' அஞ்சா நெஞ்சங்கொண்ட வீராங்கனையாக ஆங்கிலத்தில் சரளமாக உரை நிகழ்த்தியதையும் கண்டு பூரித்துப் போயினர்!

அண்ணல் அம்பேத்கார் தனது அன்பு ஆசிகளை வழங்கினர்-அன்னைக்கு!

இந்நிகழ்ச்சி குறித்து அன்னையிடம் வினவிய போது " எனது சமூகத்தலைவரைச் சந்தித்ததோடு—அவரது அன்பு ஆசிகளையும் பெற்றவள் நான்" என்று பெருமிதத்தோடு கூறினர்!

## 'குடிசை' வேண்டாமென்று அடம் பிடித்த குழந்தை!

சின்னக்குழந்தை! செல்லக் குழந்தை—அதன் தாய் தந்தைக்கு! தந்தைக்கு மிக வேண்டியவர்—செங்கற்பட்டு, கொலம்பஸ் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர். தனது செல்லக் குழந்தையான பெண் குழந்தையை-அப்பள்ளியில் படிக்கவைக்க அழைத்துச் செல்கிருர், தந்தை.

அப்போது...கொலம்பஸ் உயர்நிலைப் பள்ளியில் குழந்தைகள் வகுப்பு, கூரை வேய்ந்த அறையில்—தரையில் மணல் கொட்டப்பட்டிருக்கும். படிக்கும் குழந்தைகள் அந்த மணலில் உட்கார்ந்து கொண்டு-அந்த மணலிலேயே "அ...ஆ...இ...ஈ' என்று கையினுல் எழுதவேண்டும்!

நம் குழந்தையையும் அங்கே அமர வைத்தார் தலைமையாசிரியர்! உடனே குழந்தை 'கோ' வென அழத் தொடங்கி விட்டது! ஆசிரியருக்கும் புரிய வில்லை—அன்புத் தந்தைக்கும் விளங்கவில்லை! எப்ப டியோ சமாதானப்படுத்தி அழுகைக்குக் காரணம் கேட்க...

அந்தக் குழந்தை சொல்கிறது:–

"ம்...ம்...இந்தக் குடிசையிலே உட்கார்ந்து நான் படிக்கமாட்டேன் போ - எனக்குக் கல் கட்டடம் வேணும்பா"

ஓஹோ...!இதற்காகத்தான் அழுகையா?

ஆசிரியருக்கும், தந்தைக்கும் என்ன செய்வ தென்றே புரியவில்லை! குழந்தைகள் வகுப்பு கூரை வேய்ந்த அறையில்தானே...! எப்படிக் கல் கட்டடத் துக்கு அழைத்துச் செல்ல முடியும்?

ஆசிரியரின் விளக்கம்—சமாதானம் குழந்தை யின் 'பிஞ்சு மனசை'த் தொடவில்லை; தொடர்ந்து அழுகிறது; கல் கட்டடம் வேண்டுமென்று!

என்ன செய்வது—வேறு வழியில்லை! அந்தக் குழந்தையைக் கல் கட்டடமாக இருக்கிற வகுப் பறைக்கு அழைத்துச் சென்றனர்.

குடிசை வேண்டாமென்று அடம் பிடித்த அந்தக் குழந்தை — பருவத்தாலும் உருவத்தாலும் மட்டுமல்ல, கொள்கையாலும் வளர்ந்து

அண்ணனின் தங்கையாகி—அமைச்சர் பொறுப் பேற்று-குழந்தையாய் இருக்கும் போது எந்தக் குடிசை தனக்கு வேண்டாம் என்று அழுது அடம் பிடித்ததோ— அந்தக் குடிசைகள் ஏழைச் சமுதாயத் திற்கே வேண்டாம்: எரியாத வீடுகள்தான் வேண்டும் என்று திட்டமிட்டுப் பணியாற்றும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்!

அந்தக் குழந்தை தான்-நமது அன்னை இப் போது!

"வறுமைத் தேளினல் கொட்டப்பட்டு" வாழ்வே பெரும் சுமையாக எண்ணி வேதனைப்படும் தாழ்த் தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்கள் நிம்மதி யாக வாழ, எரியாத வீடுகள் வேண்டும்—குடிசை களே வேண்டாம்" என அண்ணனின் வழியில் பணி யாற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களின் பிஞ்சு நெஞ்சத்திலேயே "குடிசைகள் வேண்டாம்" என்ற எண்ணம் அழுத்தமாகப் பதிந்திருந்தது என்பதை இந்தச் சம்பவம் விளக்குகிற தல்லவா?

அன்னையின் 'பிஞ்சு மன' ஆசை நிறைவேறட் டும்-குடிசைகள் ஒழியட்டும்! ஏழைகள் 'கல் கட்டட வாசி'களாக மாறட்டும்.'

## இலட்சாதிபதியா? இலட்சியவாதியா?

சென்னை பார்க் டவுன் மெமோரியல் மண்டபத் தில் மறைந்த 'தாத்தா' ரெட்டமலை சீனிவாசன் அவர்களின் நினைவு நாள்!

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்றத் தலைவர் திரு ஜே. சிவசண்முகம் பிள்ளை, பேராசிரியர் திரு. க. அன்பழகன்' அரிசன நலத் துறையின் முன்னாள் கௌரவ இயக்குனர், திரு. வி. பாஷ்யம் அய்யங்கார் ஆகியரோடு அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களும் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் அன்னையின் உரையினைக் கேட்ட-திரு வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்கள்-திரு ஜே. சிவசண்முகம் பிள்ளையவர்களிடம் "இவ்வளவு திறமையோடு பேசும் இந்தப் பெண் காங்கிரசுக்கு வந்தால் ரொம்பவும் நல்லது. எப்படியாவது பேசி, காங்கிரசில் சேர்த்து விடுங்கள்"-என்று கூற-அவர் அம்மையாரின் தந்தையை அணுக-தந்தை அன்னையின் கணவரான திரு. முத்து அவர்களிடம் கூற அன்னையும்-திரு. முத்து அவர்களும் அழுத்தமாகவும் முடிவாகவும் கூறி அனுப்பினர்:

"நாங்கள் இலட்சாதிபதிகளாக இருப்பதைவிட இலட்சியவாதிகளாக இருப்பதையே விரும்புகிறோம்." —என்று!

இதுபற்றி அன்னை கூறினர்...

என்றைக்குமே எனக்கோ—என் கணவருக்கோ கொள்கையில் சபலமோ—சலனமோ ஏற்பட்டதில்லை. எத்தகைய இடுக்கண்களும்—இன்னல்களும் வந்துற்றாலும் அண்ணனின் தங்கையாக இருப்பதில்தான் எங்களுக்கு-கொள்கைப் பிடிப்பும்—இலட்சியத் துடிப்பும் இருந்தது.

"ஏமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்'! என்றார் பாவேந்தர் பாரதிதாசன் அந்த கீதம் தான் எங்களது வழ்க்கை வேதம்" என்றார், அண்ணா.

**களத்தில் அண்ணா!**

அண்ணல் அம்பேத்கார் அவர்களின் தலைமையில் பழங்குடிகள் எழுச்சியோடு கிளர்ச்சி செய்து கொண்டிருந்த நேரம்! லண்டன் மாநகரில் நடைபெற்ற வட்ட மேஜை மாநாட்டில் ஆங்கிலப் பிரதமர் ராம்சே மெக்டனல் அவர்கள்-அண்ணல் அம்பேத்தார் அவர்களின் உணர்ச்சிமிக்க உரையினைக் கேட்டு - பழங்குடிகளின் கோரிக்கையிலுள்ள நியாயத்தை உணர்ந்து வழங்கிய 'தனித்தொகுதி' (Separate Electorate) முறையினை ஒழித்துக் கட்டிய பூனா ஒப்பந்தத்தைப்பகிஷ்கரித்து, தாழ்த்தப்பட்ட மக்கள் போர்க்கொடி உயர்த்தினர்,-இந்தியத் துணைக்கண்டம் முழுமையும், டாக்டர் அம்பேத்கார் தலைமையில்!

"பூனா ஒப்பந்தம் ஒழிக-இந்த முழக்கம், உரிமை முழக்கமாக எதிரொலித்தது! அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கு ஆதரவாகத் தமிழகத்தில் தந்தை பெரியார் அவர்களும்—அறிஞர் அண்ணா அவர்களும் தமிழகத் தாழ்த்தப்பட்டோரைத் திரட்டுவதில் துணைபுரிந்தனர்.

உணர்ச்சி வெள்ளமாக உருவெடுத்துத் திரண்ட இந்த உரிமைப் பட்டாளத்தைக் கண்டு

காங்கிரஸ் கதி கலங்கியது; கலவரத்தில் இறங்கினர் காங்கிரஸ் காலிகள் அங்கும் இங்குமாக!

நாடு முழுமையும் பெருக்கெடுத்த இந்த உணர்ச்சி, சென்னை மாநகரத்தில் மேலோங்கியது!

சென்னை, பெரம்பூரையடுத்த பெரவள்ளூரில் "பூனு ஒப்பந்த எதிர்ப்பு நாள்" கூட்டம்!

வரலாற்றில் நின்று நிலைக்கத்தக்க இந்தக் கூட்டத்தில் அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களும் போர்க் கொடி உயர்த்தும் வீராங்கனையாகக் கலந்து கொண்டு வீரவுரை யாற்றினர்.

கூட்டம் முடிந்தது, கூட்டத்தில் ஊட்டப்பட்ட உணர்ச்சி தொண்டர்களின் இரத்த நாளங்களில் புகுந்து முறுக்கேற்றியது—"பூனு ஒப்பந்தம் ஒழிக" என முழங்கிக் கொண்டு ஊர்வலமாகக் கிளம்பினர்.

மாபெரும் ஊர்வலத்தையும்—தொண்டர்களின் உத்வேகத்தையும் கண்ட காங்கிரசார், ஊர்வலத்தினரை வழிமடக்கித் தாக்கினர். அந்தக் காலித் தனத்துக்குக் கெங்காதரன் என்ற வீர இளைஞன்—பழங்குடி மகன் பலியானன்!

அந்த இலட்சிய வீரனின் பிணத்தைக் கண்டு அன்னை அழுத காட்சி—புறநானூற்றுக் காட்சி யாகும்!

இந்நிகழ்ச்சி பற்றி அன்னை கூறிய வீரமொழி கள்:

"நான் கலந்து கொண்ட 'நிகழ்ச்சியில் நடந்த இந்தக் கொலை பாதகத்தை நான் வாழ்க்கையில் என்

றும் மறக்கவே முடியாது. அந்தக் களத்திலேயே நின்று நான் கண்ட காட்சியாகும் அது. போருக்கு அனுப்பிய மகன்-மார்பில் வேல் பாய்ந்து இறந்திருப் பதைக்கண்டுபுறநானூற்றுத்தாய்எத்தகையஉணர்ச் சியைப் பெற்றுளோ—அத்தகைய உணர்வை நான் பெற்றேன். கெங்காதரனின் வீர மரணம்–பழங்குடி மக்களின் வரலாற்றில் ஓர் பொன்னேடு; புரட்சி ஏடு!"

முத்திரை நிகழ்ச்சி

1946ஆம் ஆண்டு! புதுவை மாநகரில் திராவிடர் கழக மாநாடு! மாநாட்டின் தலைவர் அஞ்சா நெஞ் சன் பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி அவர் கள். மாநாட்டில், 'திராவிட நாடு' படத்தைத் திறந்து வைப்பதற்காக, பேராசிரியர் க. அன்பழகன் அவர் களையும், காயிதே ஆஜம் மகமதலி ஜின்னு அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைக்க 'டார்பிடோ' ஏ. பி. சனுர்த்தனம் அவர்களையும், தாழ்த்தப்பட் டோரின் தனிப் பெருந் தலைவர் அண்ணல் அம்பேத் கார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து உரையாற்ற அன்னை டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களையும் மாநாட்டு வரவேற்புக்குழுவினர் அழைத்திருந்தார்கள். அன்னைக்கு நிகழ்ச்சி-மாலை யில்!

காலை நிகழ்ச்சியில் ஏ. பி. ஜே. பேசிக்கொண்டி ருக்கும்போதே—'காங்கிரஸ் குண்டர்கள்' கம்பு, அரிவாளுடன் ஓடி வந்து கலாட்டா செய்யத் தொடங்கி விட்டார்கள்!

கொள்கையோடு மோத வேண்டிய அரசியல் வாதிகள் தங்கள் கைகளில் கொடும் ஆயுதங்களையும் -நெஞ்சங்களில் கொலை வெறியினையும் தாங்கிக் கொண்டு பெரும் கலகம் செய்து கொண்டிருக்கிறார் கள்!

பெண்களும், ஆண்களும் சிதறி ஓடுகிறார்கள் ஒளி வீசிக்கொண்டிருந்த விளக்குகள் அணைகின்றன— இல்லை–அடித்து நொறுக்கப்படுகின்றன. மக்கள் அலமலந்து-அலறிக் கொண்டு ஓடுகின்றனர்—பெரும் குழப்பம்!

இந்த நேரத்தில்...! வீராங்கனை சத்தியவாணி முத்து அவர்கள் மேடையில் அமர்ந்திருக்கிறார் தன் கணவர் முத்து அவர்களோடும்—தலைவர்களோடும்!



மாநாட்டுக்குக் காரணமாக இருந்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களை-தமிழினிமை அறியாத இழி தகையாளர்கள்" மூர்த்தண்யமாகத் தாக்கிவிட்டனர். வில்லெடுத்துப் போராடினான் அர்ச்சுனன்—அது போன்று தமிழ்ச் சொல்லெடுத்துப் பகை அழிக்கும் கலைஞர் கருணாநிதி அவர்களைக் கடுமையாகத் தாக்கி வீதியில் தூக்கி எறிந்த நிகழ்ச்சியும் இம்மாநாட்டில் தான்!

குழப்பம்-பெரும் கலகமாயிற்று! தலைவர்களைத் தீர்த்துக்கட்ட வெறிகொண்ட கூட்டம் மேடையை நோக்கி விரைந்தது! விடுமா—பகுத்தறிவுப் பட்டாளம்? இலட்சியப் படையல்லவா ஈரோட்டு வேந்தர் படை? தலைவர்களைச் சூழ்ந்துகொண்டு—மாநாட்டின் பின்புறமாக அழைத்துச் சென்று தன் மதிப்பு இயக்க நண்பர் பொன். இராமலிங்கம் அவர்களின் இல்லத்தில் தங்கவைத்தனர்—அன்னையையும், மற்றும் கழகத் தலைவர்களையும்.

மாநாடு—கல்வரத்தில் முடிந்தது! தலைவர்களில் பலரை, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரை, பாதுகாப்போடு ஊருக்கு அனுப்பி வைத்தனர் அருந்தொண்டர்கள்.

அன்னை சத்தியவாணிமுத்து அவர்களும் அவர்தம் கணவரும் புதுவையிலேயே தங்கினர்; மாநாட்டுக்கு அடுத்த நாளும் தங்கியதோடன்றி, தைரியமாகக் கடைத் தெருவுக்கும் சென்று வந்தனர் மாநாட்டுக்கு வந்த தலைவர்களில் அவரும் சென்று

விட்டதையும், அண்ணா சத்தியவாணிமுத்து மட்டும் தங்கியிருப்பதையும் கலகக் கழுகுக் கண்கள் தெரிந்து கொண்டன!

இது அண்ணாக்கோ, அவரது கணவருக்கோ தெரியாது!

சென்னைக்குப் புறப்பட்ட அவர்களைத் தோழர் பொன். இராமலிங்கம் பாண்டிச்சேரி இரயில் நிலையத்தில் வண்டியேற்றாமல்—காரில் வில்லியனூர் அழைத்து வந்து வண்டியேற்றினார். காரணம் அண்ணாக்குப் புரியவில்லை! அதைப்பற்றிக் கவலைப்படவும் இல்லை கலவரமின்றியே காணப்படுகிறார்!

புகைவண்டி புறப்படும்போதுதான் — பொன். இராமலிங்கமும், மற்றத் தொண்டர்களும் காரணத்தைக் கூறுகின்றனர்.

''நீங்கள்—இங்கே தங்கியிருப்பதைக் காலிகள் அறிந்து கொண்டார்கள். பாண்டிச்சேரியில் நீங்கள் ரயிலேறும் போது "துரோபதை போன்று துயிலுரியவேண்டும்—துண்டு துண்டாக வெட்டிப்போட வேண்டும்" என்று பேசிக் கொண்டார்கள். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்ததால்தான் உங்களை வில்லியனூர் அழைத்து வந்து வண்டியேற்றினோம்'' என்று விளக்கம்' தந்தார்கள்!

---

அண்ணா அப்போதும் தயக்கமோ—கலவரமோ—பயமோ அடையவில்லை' அண்ணா இதயமார ஏற்றுக் கொண்ட இலட்சியப் பாதை நறுமண மலர்ப் பூங்

காவா...? அல்லவே!-ராஜபாட்டையா? கிடையாதே! இதைத் தெரிந்துதானே ஈரோட்டுப் பாதையையும்-காஞ்சி வழியினையும் ஏற்றுக் கொண்டார்!

எனவேதான்- நண்பர்கள் தந்த 'அதிர்ச்சிச் செய்தி' அவர்களை அயர்ந்துவிடச் செய்யவில்லை!

ஓர் புன்முறுவல்...இதுதான் அந்தச் செய்திக்குக் கிடைத்த பதில்!

புதுவை நிகழ்ச்சி—அன்னையின் வரலாற்றில் ஓர் அழியாத முத்திரை!



## மதுரை மீனுட்சி!

27-6-1963 அன்று விருதுநகரில் இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டை யொட்டிப் பெண்கள் முன்னேற்ற மாநாடு நடை பெற்றது. அதற்கடுத்த நாள் அரசியல்மாநாடு நடை பெற்றது. அந்த மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அறிஞர் பெருந்தகை அண்ணு அவர்கள் மாநாட்டுப் பந்தலில் நிரம்பிவழிந்த மக்கள் 'கலகலெனச்' சிரிக்க நகைச் சுவையாகச் சொன்னுர் கள்:

"நாம் கடவுள் நிந்தகர்கள்; ஆண்டவனை வணங் காதவர்கள் என்றெல்லாம் மாற்ருர்கள் பேசுகிருர் கள். கோவிலுக்கும் — தலங்களுக்கும் சென்றுதான் நாம் ஆண்டவனைக் காணவேண்டுமா? திருப்பதி வெங்கடாசலபதியைக் கண்டு வணங்கவேண்டுமா? இதோ... என் அருகில் தம்பி சம்பத் இருக்கிருர், திருப்பதி வெங்கிடாசலபதிபோல்!

மதுரை மீனுட்சியைச் சேவிக்க நாம் மதுரைக் கோவிலுக்குச் செல்ல வேண்டாம். இதோ... தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார் வீற் றிருக்கிருர் — மதுரை மீனுட்சி போன்று."

அன்னை சத்தியவாணி முத்து அவர்களை மதுரை மீனுட்சியாக வருணித்தார், அண்ணன். கழகத் தோழர்களுக்கு ஒரே மகிழ்ச்சி! ஆரவாரம்!

அண்ணனின் இந்தப் புகழுரையைப் பற்றி அன்னையிடம் கேட்டபோது அவர்கள் சொன்னுர்கள்,

''அண்ணன்—கழகத் தோழர்களை உயர்த்தி உயர்த்திப் பேசியே நம் கழகத்தை உயர்த்தினர்; அவர் நம்மையெல்லாம் வாழ வைத்த தெய்வம்" —என்ருர்! — கண்களில் வழிந்த கண்ணீரை அண்ணனுக்குக்காணிக்கையாகச் செலுத்திக் கொண்டே!

## நெற்றித் திலகமிட்ட வெற்றித் திருமகள்!

'கைபிடித்த மனையாட்டியின் காற்சிலம்பை விற்க வந்த மாசாத்துவான் பெற்றெடுத்த மைந்தன் கோவலனை-கள்வன் எனக் குற்றம்சாட்டிக் கழுத்தை வெட்டினன் என்ற சேதி கேட்டுத் துடிதுடித்து—கொலைக் களத்தில் வெட்டுண்ட மரம் போல் விழுந்து கிடந்த தன் இதய வேந்தனைக் கண்டு அரற்றி அழுது — அவன் மேனியில் வழிந்த இரத்தத்தை எடுத்துத் திலகமிட்டு "சாவா என் தமிழுக்கு அறத்தைக் கொன்றவனுக்கு 'கோ', என்ற பட்டமா? கொடியவன் எவனே கோர்த்த சொல்லுக்கு மயங்கி கொலை செய்யத் தீர்ப்பளித்தானே அவன் கொடுங்கோலன் — அவனை அழிக்கிறேன் — அவன் ஆட்சியைச் சாய்க்கிறேன்" என்று சூளுரைத்துக் கிளம்பினள்' கற்புக்கரசி கண்ணகி' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது!

இதோ...கழக வரலாற்றில், இரத்தத் திலகமிட்ட வெற்றித் திருமகள்!

வடசென்னையில் தேர்தல் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! கூட்டத்தில் குழுமி

யிருந்த மக்களைக் கண்ட காங்கிரசார், வெற்றி—கழகக்கொள்கைக்குத்தான் என்று தெரிந்துகொண்டு கல்லெறிந்து கலாட்டா செய்தனர். அதில் எட்டு வயது இளஞ் சிறுவனுக்குப் பலத்த காயம் — இரத்தம் சொட்டச் சொட்ட அந்தச் சிறுவனை மேடைக்கு அழைத்து வந்தனர், கழகத் தோழர்கள்.

அப்போது மேடையில் அன்னை சத்தியவாணி முத்து அவர்கள் தனது சொல்லால் காங்கிரஸ் பாசிஸ்டுகளுக்குக் 'கசையடி' கொடுத்து கொண்டிருக்கிறார்...!

இரத்தம் வழிய நிற்கும் இளஞ்சிறுவனைக் கண்டதும் தாயின் நெஞ்சம் துடித்து விட்டது! பையனின் தலையில் வழிந்த இரத்தத்தை எடுத்து நெற்றித் திலகமிட்டார்; நெருப்பானார்! கல்லெறிந்து இளஞ்சிறுவனைக்காயப்படுத்தியகாங்கிரஸ்காலிகளைத் தமிழ்ச் சொல்லெடுத்து வீசி விரட்டினார்!

"நெற்றியிலிட்ட இரத்தத் திலகம்—நெருப்புச் சூரியன்! கறுப்புச் சந்தையினரே! காங்கிரஸ் காலிகளே! உங்கள் காலம் கழிந்துவிட்டது; அழிந்து போவீர்கள்—அறம் உங்களை அழித்துவிடும்! கனன்றெழும் என் போன்ற தாய்மார்களின் சாபம் உங்களை அழித்துவிடும்...அழித்துவிடும்!"—என்று சாபமிட்டார்—சபதமெடுத்தார்—காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்தொழிக்க!

கண்ணகியனைய அன்னை இட்ட சாபம்தான் காங்கிரஸ் ரெண்டு துண்டானதோ?

**அய்யா'வின் அன்பு!**

ஈரோட்டில் திராவிடர் கழக மாநாடு! இம் மாநாட்டில்தான் 'அய்யா' அண்ணாவிடம் "பெட்டிச் சாவியைத் தந்துவிட்டேன்" என்று கழகப் பொறுப்பை ஒப்படைத்தது! அந்த மாநாட்டின் ஊர்வலம் மிகப் பிரம்மாண்டமான முறையில் வந்துகொண்டிருக்கிறது.

ஊர்வலத்தில் 'அய்யா' வந்து கொண்டிருக்கிறார்.

அப்போதுதான் ரயிலை விட்டிறங்கிய அன்னை சத்தியவாணிமுத்து அவர்கள்—தன் கணவருடனும், கைக்குழந்தையுடனும்—தனது மாமியாருடனும் ஊர்வலத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்!

அன்னை தன் குடும்பத்துடன்வருவதை 'அய்யா' பார்த்துவிட்டார். உடனே வண்டியை விட்டு இறங்கி அன்னையின் அருகில் வந்து "ம்...இப்படித்தான் குடும்பத்துடன் வரவேண்டும். எனக்கு ரொம்ப மகிழ்ச்சி...ம் வாங்க வாங்க..." என்று அன்போடு ஊர்வலத்தில் அழைத்துச் சென்றார்!

அய்யாவின் அன்பு அன்னையின் உள்ளத்தை நெகிழவைத்தது!

**ராணி மெச்சிய வாணி முத்து!**

எடின்பரோ கோமகனின் இல்லத்தரசி—எழிலரசி—இங்கிலாந்து நாட்டின் பேரரசி ராணி எலிச

பெத் அம்மையார் அவர்கள் சென்னை வந்தார்; இந்திய நாட்டின் சுற்றுப் பயணத்தின்போது!

பெண்ணரசிக்கு—இங்கிலாந்து அரண்மனைபெரு மாட்டிக்குச் சிறப்பான வரவேற்புத் தரப்பட்டது; தமிழகச் சட்டமன்றத்தின் சார்பாக; சென்னை ராஜாஜி மண்டபத்தில்!

அவ்விழாவில் கலந்து கொண்ட சட்ட மன்ற உறுப்பினர்களை அரசிக்கு அறிமுகம் செய்துவைத் தார் அப்போதைய அமைச்சர் திரு. சி. சுப்பிர மணியம்.

'அறிமுகம்' நடக்கிறது!

அன்னை சத்தியவாணிமுத்து அவர்களின் அரு கில் வருகிறார் அரசி! தன் நீலக்கண்களால் அன்னை யைக் காணுகிறார் 'குயின் எலிசபெத்'!

"இவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்—பெயர் சத்திய வாணிமுத்து"

—சி. சுப்பிரமணியனாரின் அறிமுக அறிவிப்பு இது!

பேரரசியின் கண்களில் ஆச்சரியக் குறி...! அது உடன் வினாக்குறியாக உருவெடுத்தது!

"எதிர்க்கட்சி வரிசையில் ஒரே ஒரு பெண் உறுப் பினர் தானா?"—ராணிக்கு ஒரே ஆச்சர்யம்! அதிசய மும் கூட!

''அய்யய்யோ...! இந்த ஒருவரே போதுமே...எங்களைத் திணரடிக்க...''—நிதியமைச்சராயிருந்த சுப்பிரமணியம் அலறியடித்துக் கூறினர்!

வெடிச் சிரிப்பு அனைவரிடமிருந்தும்—சுப்பிரமணியமும் சிரித்தார்!

அரசியார் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்; கொட்டினர் வாய் முத்துக்களை!

அன்னையின் கைகளைக் குலுக்கிக் கொண்டே தன் அன்புப் பாராட்டுகளைக் குவித்தார் 'குயின் எலிசபெத்'.

## மக்களின் மனத்தில் நிலைத்த மாதரசி

1967ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்ற நேரம்! அன்னை டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் போட்டியிட்ட பெரம்பூர்த் தொகுதியில் காங்கிரஸ்காரர்கள் ''தோல்வி உறுதி தங்களுக்கு'' என்று தீர்மானித்துக்கொண்டு பெரும் கலவரங்களில் ஈடுபட்டார்கள்!

பெரம்பூர்த் தொகுதியிலிருக்கும் தாய்மார்கள் அன்னையைத் தங்கள் அன்புச் சகோதரியாக—தங்கள் வீட்டுப் பெண்ணாகவே நினைத்து அன்பை அள்ளிச் சொரிவார்கள்! அத்தகைய அன்புகொண்ட மக்களை அலமலர வைக்க வேண்டும்--அவர்கள் அலமலந்து அசந்துபோகும் வேளையில் 'கள்ளவாக்கால்' விளையாட வேண்டும் என்று கள்ளக் கருத்துக்

கொண்ட காங்கிரசார் வீண் புரளிகளை யெல்லாம் கிளப்பிக்கொண்டே இருந்தார்கள்!

தேர்தல் பிரசாரத்தின் உச்சக் கட்டம் தோழர்களும் தாய்மார்களும் 'பம்பரங்களாகச்' சுற்றிச் சுழன்று பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அன்னையார்—தொகுதி வாக்காளர்களைச் சந்தித்துத் தொடர்ந்து பல தேர்தல் கூட்டங்களில் உரையாற்றிக் கொண்டும் வேகமாகத் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

அந்த நேரத்தில்...!

அம்மையாரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாகத்தொகுதிமக்களிடையே செய்தி பரவிவிட்டது! அவ்வளவுதான் தொகுதியிலிருக்கும் தாய்மார்கள் அனைவரும் அன்னையைத் தேடிப் படையெடுக்கத் தொடங்கி விட்டார்கள். அவரைக்கண்டு—தங்கள் செவிகளில் விழுந்த செய்தியைச் சொல்லி அழத் தொடங்கி விட்டார்கள். அவர்களை யெல்லாம் சமாதானப் படுத்தி அன்னை அனுப்பி வைத்தார்கள்!

என்னதான் சமாதானம் சொன்னாலும்—மக்களின் மனம் நிறைவு பெறவில்லை- 'ஏதோ நிகழப் போகிறது' என்ற பயமே அவர்களின் முகங்களில் பளிச்சிட்டது. அன்னையை விட்டுப் பிரிய மனமில்லாமல்—தங்கள் தங்கள் இல்லங்களை நோக்கிச் சென்றார்கள்!

திடீரென்று ஒரு புரளி...!

"அம்மையாரைக் கத்தியால் குத்திவிட்டார்கள்!"

அவ்வளவுதான்! 'ஏதோ நிகழப் போகிறது' என்ற செய்தியைக் கேட்டுத் துடித்த மக்கள்—'அது நிகழ்ந்து விட்டது" என்ற அதிர்ச்சியான செய்தியைக் கேட்டு வாளா விருப்பார்களா? வந்து விட்டார்கள்!

"கிளம்பிற்று காண் சிங்கக் கூட்டம்!—கிழித் தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை" என்றூரே பாவேந்தர்... அது போன்று கிளம்பி விட்டார்கள், தோழர்களும்—தாய்மார்களும்; சூளை கலியாண மேஸ்திரி தோட்டத்திலிருந்து!

"அன்னை எங்கே? அம்மையார் எங்கே! எங்கள் அன்புச் சகோதரி எங்கே? சத்தியமுத்து எங்கே? அவரின் சத்தான தமிழ்ச் சொல் எங்கே? எங்கே? எங்கே?" என்று தேடத் தொடங்கி விட்டார்கள். அவர் ஒவ்வொரு கூட்டமாகப் பேசிக்கொண்டு செல்ல அவரைப் பின்தொடர்ந்து வந்து கொண்டு இரவு 12 மணிக்குக் கடைசியாய்ப் பேசிக்கொண்டிருந்த கூட்டத்தில் வந்து அன்னையைக் கண்டார்கள்!

அன்னை-அன்றைய ஆளும் கட்சிக்கு-எதேச்சாதிகார ஆட்சிக்கு-அண்ணனின் தங்கையாக நின்று அறிவுறுத்திக் கொண்டிருந்தார். வாக்காளர்களுக்கு அன்பு வேண்டுகோளைத் தந்து கொண்டிருந்தார்!

அன்னைக்கு ஓர் ஆபத்தும் இல்லையே!

வீண் புரளியா?

'ஆம்' என்றார்—வந்த மக்களை அணைத்து ஆறுதல் கூறிய அன்னை. "தேர்தல் நேரத்தில் உங்களை அலைக்கழிக்க, காங்கிரஸார் திரித்துவிட்ட கயிறு; எரிகிற வீட்டில் பிடுங்கினவரைக்கும் ஆதாயம் தேடும் எத்தர்களின் சித்து விளையாட்டு இது. எனக்கு ஒரு ஆபத்தும் இல்லை-பணிகளைக் கவனியுங்கள். உங்களின் பாச நெஞ்சங்களுக்கு என் நன்றி-போய் வாருங்கள்"—என்றார் அன்னை!

ஊஹூம்! அவர்கள் போவதாக இல்லை—அன்னையை விட்டு.

"இப்போதே-நீங்கள் எங்கள் பகுதிக்கு வர வேண்டும். அங்கிருக்கும் அனைத்து மக்களும் விழி மூடாமல் உங்கள் விழிகாணத்துடித்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அங்கு வந்து உங்களுக்கு ஆபத்து ஒன்றுமில்லையென்று நிதர்சனமாகக் காட்டினால் தான் நம்புவார்கள்—ம் ... வாருங்கள்"—மக்கள் கட்டளை.

மாதரசி தட்ட முடியுமா?

உடன் சென்றார்கள்!

இரவு 1 மணி-ஆங்கிலக் கணக்குப்படி அடுத்த நாள் உதயமாகி விட்டது ஊர்! உறங்கும் வேளை-

ஆனால்—அந்த ஊர் மட்டும் உறங்கவில்லை! கொட்டுக் கொட்டென விழித்துக் கொண்டிருந்தது!

அன்னை அடியெடுத்து வைத்தார்கள்—கலியாண மேஸ்திரி தோட்டத்திற்குள்! அவ்வளவுதான்...ஒரே அழுகுரல்! பெருங் கூட்டம் அன்னையைச் சூழ்ந்து கொண்டது!

"அம்மா"

"அக்கா"

"குழந்தை"

அவரவர் வயதுக்குத் தக்கபடி அழைத்துத் தொட்டுப் பார்த்தும்—கூர்ந்து நோக்கியும் 'ஒண்ணு மில்லையே யம்மா...ஒண்ணு மில்லையே தாயே' என்று விசாரித்தும் அன்னைக்கு அன்பால் அபிஷேகம் செய்து விட்டார்கள்!

அன்னைக்கு ஆபத்து ஒன்றுமில்லை—என்று நேரில் கண்டு தெரிந்து கொண்ட பின்னரே ஆறுதல் பெற்றார்கள்; அமைதியுற்றார்கள்!

இந்த நிகழ்ச்சி அன்னையின் நெஞ்சில் இன்றும் நின்று நிலைத்திருக்கிறது!

"சமுதாயத்தால் தள்ளப்பட்டு சதிகாரர்களால் சதி செய்யப்பட்டு உதைபட்டுக் கொண்டிருக்கும் என் மக்களின் வாழ்வை வளப்படுத்தப் பணியாற்று வதே என் வாழ்க்கையின் இலட்சியம்"-என்கிறார் அன்னை!

இல்லாதாரின்-ஏழைகளின் ஏந்தலான அண்ணனின் தங்கையல்லவா அன்னை? அவரின் இலட்சியம் 'இது' வாக அல்லாமல் வேறு எதுவாக இருக்க முடியும்?

மக்களின் நெஞ்சில் நிலைத்த மாதரசியே! அன்னையே!! அன்புத் தாயே! ஆதியர்களின் தலைவியே! நீ வாழ்க - பல்லாண்டு பல்லாண்டு! வளர்க உன் தொண்டு! பல்லாயிரத்தாண்டு! ஓங்குக உன் புகழ் பலகோடி நூறுயிரம் ஆண்டு!—என்று வாழ்த்துகிறோம்!



முதல்வரும் அன்னையாரும்

# தி.மு. கழக ஆட்சியில்
# $2\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில்
### மாண்புமிகு அமைச்சர் அன்னை
# டாக்டர் சத்தியவாணி முத்து
### நிறைவேற்றிய சாதனைகளின் பட்டியல்

**செய்தித்துறையில் அன்னையின் சாதனைகள்!**

'ஆகாஷவாணி' அழிந்தது; 'வானொலி மலர்ந்தது; தமிழக வானொலி நிலையங்களில்'

மாவட்டந்தோறுமிருந்த விளம்பர அதிகாரிகள்—ஆட்சியின் சாதனைகளை மட்டுமே எடுத்துக் கூறவேண்டுமென்றிருந்த திட்டத்தை மாற்றி—மக்களின் எண்ணங்களையும் அரசுக்கு அவ்வப்போது தெரிவிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப் பட்டது!

காங்கிரஸ் ஆட்சியிலிருந்த 'வீண் விரயத்தைத்' தடுத்து—செய்தித்துறையில் சிக்கனத்தை ஏற்படுத்தியது!

சினிமாத் துறையில் தமிழகத் திரைப்படங்களில் சிறந்த படத்துக்கு மாநிலப் பரிசு வழங்கும் திட்டம்.

டூரிங் சினிமா கொட்டகைகளுக்கு இருந்த ஓராண்டு அனுமதி முறையை — இரண்டாண்டுகளாகச் செய்தது!

மக்களின் வசதிக்காக நல்ல முறையிலான தற்காலிகக் கொட்டகைகளை (Semi-Permanent Theatres) ஏற்படுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகிறது!

'பழைய மாமூல் விதிமுறைகள்' இருந்த சினிமா சட்டம் மாற்றப்பட்டு—'கார்ஷெட்' போன்றவைகளுக்கு விதிவிலக்குத் தந்து, சட்டத்தை தளர்த்தியது.

## அரிசன நலத்துறையில் அமைச்சரின் சாதனைகள்!

கலப்புமணத் தம்பதிகளை ஊக்குவிக்கத் தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படுகிறது!

அரிசனப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த இலவச ஆடைகளை— அரிசன மாணவர்களுக்கும் வழங்கச் செய்யப்படுகிறது!

தாழ்த்தப்பட்டவர்கள் கூட்டுறவு முறையிலான பஸ் போக்குவரத்துத் திட்டத்தைத் தீட்டி தருமபுரி, மதுரை மாவட்டங்களில் அது அமுலாக்கப்பட்டிருக்கிறது.

அரிசன மாணவ விடுதிகளுக்குத் தரப்பட்டு வந்த பணம் அதிகமாக்கப் பட்டது.

புதியதாக 37 மாணவ விடுதிகள் திறக்கப் பட்டன.

832 அரிசனத்துறைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இலவச மருத்துவ உதவி வழங்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டவர்கள் வியாபாரம் செய்ய ரூ. 5,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவச வீடு மனை களும் நிலங்களும் வழங்கப்படுகின்றன.

மலைவாசிகளுக்குப் பயன்பட ஏலகிரிமலை, மாசின குறிச்சி, குஞ்சப்பண்ணை ஆகிய இடங்களில் 'புதிய தொழில் மற்றும் உற்பத்தி நிலையங்கள்' திட்டத் தின்கீழ் மூங்கில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

புதிய கல்விக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

அரிசனங்கள் பால் வழங்கும் கூட்டுறவு சங்கங் கள் 65 திறக்கப்பட்டிருக்கின்றன.

## வேளாண்மைத் துறையில் அம்மையாரின் சாதனைகள்!

பசுமைப் புரட்சித் திட்டத்தின்கீழ் ஐ.ஆர்.8. நெல் சாகுபடி செய்யும் தீவிரத் திட்டம்.

தஞ்சை மாவட்ட ஒரு போகச் சம்பா நிலத்தில் இருபோகம் சாகுபடி செய்யுந் திட்டம்.

விவசாயிகளுக்குத் தேவையான இரசாயன உரத்தை மலிவாகவும்—மிக எளிதாகவும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(மத்திய அரசு இராசயன உர விலையை 10 சதவீதம் உயர்த்தியபோதிலும் அதிக விலையின் காரணமாக ஆகும் செலவினைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொண்டு உழவர்களுக்குக் குறைந்த விலையிலேயே இரசாயன உரம் கிடைக்கச் செய்தது மாண்பு மிகு அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களின் முயற்சியாகும்.)

1960 க்கு முன்பிருந்த புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டியிருந்தவர்களுக்கு நிலங்களைப் பட்டா செய்து தந்தது.

3,000 டிராக்டர்கள், 36,000 கிணறுகள்.

இவைகளுக்கான திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. வேளாண்மைத் துறை அமைச்சரால்.

புதிய தென்னந்தோப்பு—முந்திரி தோப்புகளும் பழத் தோட்டங்களும் அமைக்கப்பட-விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.



மோரீசஸ் தீவுத் தமிழ் ஆலயப் பேரவை சார்பாக நடைபெற்ற வரவேற்பில் அன்னை

தஞ்சை மாவட்ட நஞ்சை நிலங்களில் வடிகால் வசதி செய்யப்பட்டுள்ள பரப்பு 4000 ஏக்கர்கள்.

வேளாண்மைத் தொழிற் கழகம் மூலம் விவசாயக் கருவிகள் வழங்கப்படுகின்றன.

**வேளாண்மைக் கருத்தரங்குகள்**—லால்குடியில் நடைபெற்ற வேளாண்மைக் கருத்தரங்கினுல்—விவசாயிகளால் கூறப்பட்ட குறைகளையெல்லாம் கேட்டறிந்து—முதல்வரின் அனுமதியோடு — அங்கேயே அக்குறைகளைக் களைய ஆணைகளைப் பிறப்பித்தார்—அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள்.

லால்குடி கருத்தரங்கில் வேளாண்மை வளர்ச்சிக்குப் பல நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டன. அவைகளுள் முக்கியமானவை:

1. திருச்சி மாவட்டத்தைத் தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டத்தின் கீழ்க்கொண்டுவருதல்.

2. திருச்சி மாவட்டத்திற்கெனத் தனியே ஒரு மண் பரிசோதனை நிலையம் அமைத்தல்.

3. உழவர்களின் நன்மையைக் கருதி உரங்களின் விலையைப் பழைய விலையிலேயே மேலும் தொடர்ந்து விற்றல்.

4. திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்தல்.

5. கடன் வழங்குவதில் இருந்த விதிமுறைகள் தளர்த்தப்பட்டன.

6. குடுமியான்மலை விதைப்பண்ணையை மேலும் விரிவு படுத்தல்.

விவசாயிகளுக்குக் கடன் தரவும் — பசுமைப் புரட்சியை வெற்றிகரமாக்கவும் அதிகப்படியான தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

**மகளிர் நலத்துறை**

சத்தான உணவுத் திட்டம்.

பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள்.

*1969–70* ஆண்டுகளில்—*2200* இளநிலைப்பள்ளிகள் (Pre-Schools) திறக்கப்பட்டன.

குழந்தைகளைக் கவனிக்க *71* பால சேவகிகளும் 40 முக்கிய சேவகிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

பெண்களுக்குச் சிறு கைத் தொழிலுக்கான பயிற்சியளிக்கப்படுகிறது.

குடும்பம்-குழந்தை நல இணைப்புத் திட்டம் துரிதமாக நிறைவேற்றப்படுகிறது.

கிராம சேவிகா—முக்கிய சேவிகாக்களுக்கிருந்த வசதியின்மையை நீக்கி—வசதிகள் செய்து தரப்பட்டு, ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு அவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

அன்னை பொறுப்பேற்ற துறைகளில் எல்லாம்—தனது சிறப்பு முத்திரையைப் பொறித்து, சாதனைகள் புரிந்துள்ளார்...புரிந்து வருகின்றார்.

"வாழ்க அன்னை சத்தியவாணிமுத்து" வென ஒன்றேகால் கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக அவரது 47-வது பிறந்த நாளின்போது மனமார, வாயார வாழ்த்துகிறோம்!

நமது வாழ்த்துக்கள் கட்சி சார்புடைய அரசியல் மூலாமுக்காக எழுவதல்ல! ஒரு பண்டைச் சமுதாயத்தின் புகழ்மிக்க பழங்குடி மக்களின் இதயக் கமலங்களிலிருந்து மலருகின்ற மணங் கமழும் தூய்மை மிகு அன்பு வாழ்த்துக்களாகும்!

ஆம்! அன்னை சத்தியவாணிமுத்து தாழ்த்தப்பட்டோரின் குல விளக்கு! சுடர் முத்து! வீட்டு ரோசா! தானைத் தலைவி! தள நாயகி! அதனாலே தான் வாழ்கவென முழக்கும் அந்த உள்ளமும் உதடும் எந்தவிதமான அரசியல் கபடும் கரவும் கொண்டதல்ல என்பதனைத் தெளிவாக்குகிறோம்!

கழகத்தில் தலைவர்கள் பலருண்டு! அதில் கட்சியை நடத்துகின்ற தலைவர்கள் சிலருண்டு! அந்தச் சிலரில் சத்தியவாணிமுத்துவுக்கென்று சிலாக்யமான ஒரு இடம் தனியாக உண்டு! காரணம் பெண் என்பதனாலே மட்டுமல்ல, அவர் ஒரு பிரச்னைக்குரிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான சிறப்பும் சேர்ந்திருப்பதுதான் முக்கியமாகும்! அதனாலேதான் அன்னைக்குத் தருகின்ற மாண்பினை, அன்புப்பிழிய

லில் கிடைக்கின்ற மகத்தான 'மரியாதையை, தாழ்த் தப்பட்ட சமுதாயம் தனக்குரிய புகழாரமாக, பூணத் தக்க பூஷணமாகக் கொள்கிறது !

இப்பெரு விழாவில் சமுதாய மக்களின் சொந் தப் பங்கினை விடக் கழகத்தில் உள்ள முக்கியப் பிரமுகர்களின் பணியின் பங்கும் கனிவின் பாங்கும் எண்ணிப் பெருமித மடையக் கூடியவை யாகும்.

சமுதாயக் கொள்கையைப் பொறுத்தமட்டில் கழகத்தின் ஆதியும் அந்தமும், சாதி சமய வழக்கற்ற பகுத்தறிவுச் சமுதாயத்தைக் காண்பதே யாகும் !

பகுத்தறிவுச் சமுதாயம் என வரும்போது ஆண் டான் அடிமை என்பதோ, ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகளோ இல்லாததோர் சமதர்மச் சொர்க்கமாகும் !

அந்தச் சொர்க்க சாம்ராஜ்யத்தை உருவாக்க வித்திட்டோர், அந்த வித்தின் விளைநிலமானோர் யாரும் தாழ்த்தப்பட்டோரை, சாதியின் பேராலோ, கட்சி மனமாச்சரியத்தின் பேராலோ இழிவாக எண்ணிச் செயல்படுவதோ, மட்டமான போக்கினைக் கையாளுவதோ இல்லை யென்பதை இவ்விழாவில் பங்கேற்ற கழகப் பெருமக்கள் நிரூபித்துள்ளனர் !

அரசியல் சாதியில் பலர் தங்களது அரசியலுக் காகவோ, சம்பிரதாயத்துக்காகவோ சுயநல லாபத் துக்காகவோ, சும்மா ஒப்புக்காகவோ கலந்துகொள் வதல்ல இது !

ஆம் ! டாக்டர் சத்தியவாணிமுத்துவின் பிறந்த நாள் விழாவினை தி.மு. கழகத்தோர் தங்களது குடும்ப விழாவாகக் கருதி, கலந்து களிப்படைகின்றனர் என் பதில் துளியும் ஐயமில்லை !

இதை நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறு வதற்கான அடிப்படையே தென்னகத்தில் தி. மு. கழகம் ஒன்று மட்டுமே சமுதாயப் பணியின் மூலம் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு, நீதிக் கட்சியின் மூலம் சமுதாய அரசியலை விண்டு, அதையே தீனி யாகக் கொண்டு, வளர்ந்த பேரியக்க மாகும்! எனவேதான் சாதி அழுக்காறு எனும் பேதைமைக்கு இங்கே இடமில்லை என்கிறோம் !

என்றாலும் சிற்சில இடங்களில் சாதீய சலசலப் புகள் காதில் விழாமல் இல்லை ! என்னதான் சுயமரி யாதை உலைக்கூடத்தில் சமுதாய இரும்பை உருக்கி வார்த்தாலும் பகுத்தறிவுப் பட்டறையில் அதைத் தீட்டி இதுதான் ''மறுமலர்ச்சி மாடல்'' என்று நாம் மனம் மிக மகிழ்ந்தாலும் சாதி என்று வரும்போது அந்த வார்ப்பு வளையவும், அரசியல் வர்ணாஸ்ரமத் தின் முன் உடையவுமான கோரக் காட்சியைக் காண்கிறோம் ! இதில் சிறியவர் பெரியவர் என்ற வித்தியாசமில்லை ; அனைவரும் ஒன்றுபோல் இருக் கிறோம். சொல்லப்போனால், இது ஒன்றில்தான் நாம் சமதர்மவாதிகள் (!) என்பதைக் காட்டிக் கொள்ளு கிறோம் !

தாழ்த்தப்பட்டோரைப்பற்றி அரசியல் அரங் கத்தில் எத்தனையோ அரிப்புகள், சிராய்ப்புகள் ஏற்

படுகின்றன. நீடிக்கின்றன, நிலைக்கவும் செய்கின்றன. இதில் கட்சி வித்தியாச மிருப்பதில்லை நல்ல சோஷலிஸ்டுகளாக (!) நடந்துகொள்ளுகிறார்கள்.

தமிழ் நாட்டில் கீழ்வெண்மணிகள், கச்சரா பாளையங்கள் நிகழ்வது சமுதாயத்தின் மன வளத்தைக் காட்டவில்லை என்று நாம் மனம் வருந்துகிறோம்! ஆனால் அரசியல் என்று வரும்போது அதன் முறையும் திரையும் கண்கட்டு வித்தையாகவும், நினைப்பும் நடப்பும் சாணக்யத்தனமாக இருப்பினும், மனத்தின் ஆழத்தில் அலைமோதிக் கொண்டிருக்கின்ற 'அந்த அழுக்காறு, அந்தச் சாதிதானே என்ற அலட்சியம், அவர்கள் சொல்லி நாம் கேட்பதா என்ற எசமானத்வம், நம் சொல்லை அவர்கள் கேட்கவில்லையே என்ற எரிச்சல் இவைகளினால் எழுகின்ற சினம், அந்த இனம் இந்த இனம் என்ற கூப்பாடு நமக்குத் தெரியாமலா இருக்கிறது!

22 ஆண்டுக்காலம் வெள்ளையன் வெளியேறி, நம்மவர்கள் ஆட்சியில் குடியேறி, தேசீயத்தின் பெருமையை உலகுக்கு விளக்கம் செய்யும் சரித்திர சகாப்தத்தின் தொடக்கம் இது! அன்று முதல் இன்றுவரை இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் புது வாழ்வில் எத்தனையோ, முழக்கங்களை, உத்தரவாதங்களைக் கேட்கின்றோம்!

அத்தனையும் புரட்சியானவை, புனிதமானவை புளகாங்கிதத்தை உண்டாக்கக் கூடியவை!

ஆனலும் அரிசன மக்கள் நம்பிக்கை பெறவில்லை! சென்ற காலம்வெறும் கோஷத்தில்; உதவாக்கரையான உத்தரவாதத்தில் கழிந்துவிட்டது! எதிர் காலம் ஏமாற்றத்தில் சுருண்டு கிடக்கிறது! இந்தக் கொளுத்தும் அரசியல் கோட்டையில் இளைப்பாறிக் கொள்வதற்கென்று தாழ்த்தப்பட்ட இனம் ஒரு படர்ந்த, அடர்ந்த தருவைத் தலைமையாகக் கொள்ளத் துடிக்கின்றது!

அதற்கேற்ற குளிர் தருவாக, சரணலயமாக, சேவாதளமாகத் திராவிடமுன்னேற்றக்கழகம் பயன் படும், பயன்படுத்தப் படவேண்டும்! அதற்கான நம்பிக்கை நட்சத்திரமாக, சத்திய சாட்சியாக, சரியான தலைமையாக, இன வேட்கை கொண்ட வீராங்கனையாக, உரிமை கொண்ட அன்னையாக டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் திகழ்கிருர்கள்.

எனவே இந்தப் பிறந்த நாள் பெருவிழாவில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களாகிய நாம் நம்முடைய முழு நம்பிக்கையையும் பலத்தையும் அன்னையின் சமுதாய அரசியல் தொண்டில் பிரதி பலிக்கச் செய்யவேண்டும்!

ஆம்! தலைமைக்கு ஓர் அம்பேத்கார்! நிமிர்ந்த போக்குக்கு ஓர் சிவராஜ்! போருக்கோர் பெரியார்! பரிவுக்கோர் அண்ணு! தொண்டுக்கோர் கலைஞர்! வழிகாட்டுவதற்கோர் அன்னை! என்கிற பகுத்தறிவுப் பாரம்பரியத்திற்கொப்ப நமது வாழ்வையும், வளத்தையும் அன்னையின் கரத்தில் ஒப்படைக்கின்ருேம்!

# கவியரசு கண்ணதாசன் வாழ்த்து......

மன்னிய அன்பும் நல்ல
மதிமிகுந் திறனும் பண்டை(த்)

தென்னவர் பண்பும் ஆட்சி(த்)
திறமையும் ஒன்றுய்ச் சேர்ந்து

அன்னையின் வடிவ மாக
அமைந்ததைக் கண்டோம் என்றும்

தன்னலங் கருதா அன்னை
சத்திய வாணி வாழ்க!

# தாழை மடல்

## கவிதைகள்



முத்து

# அன்னை

— புலவர் பொன்னிவளவன் —

''தா! வரம்!' என் றேவானை நோக்கி நித்தம்
தவமிருந்து மழைஅருளைப் பெற்றுக் கொள்ளும்
தாவரம்தான் காய்கனியின் அன்னை! ஆறுய்த்
தவழ்ந்தோடும் நீர்க்குழந்தை அன்னை மேகம்!
பூவுலகில் தேனுக்குப் பூவே அன்னை!
புலவர்க்குப் பொதுவாகத் தமிழ்தான் அன்னை!
பாவலரின் பாட்டுக்கு மனமே அன்னை!
பணம், அன்னை 'பராசக்தி' பலருக் கிங்கே!

பெற்றெடுத்த தாயைநாம் அன்னை என்போம்!
பிறந்ததிரு நாட்டையும்நாம் அன்னை என்போம்!
கற்றறிந்தே 'இளமையிற்கல்!' என்று சொன்ன
கவிக்கிழவி பேர்என்ன? ஔவை! அந்த
நற்றமிழ்ச்சொல் பொருள்என்ன? அன்னைஎன்போம்!
நாகம்மை யார்அன்னை ஒருகா லத்தில்!
குற்றமிலாக் காங்கிரசார் அன்னை என்றே
கூறிடுவர் கஸ்தூரி பாயை இன்றும்;

தாய்க்குலத்தின் பிரதிநிதி என்று சொல்லித்
தலைநிமிரும் உயர்சத்திய வாணி முத்து
வாய்படைத்தோர் பாராட்ட வாய்த்த அன்னை!
வரிப்புலியை முறத்தாலே அடித்த வீரம்

போய்விட்ட தா?என்று நினைத்த நாளில்
'போய்விடுமா?' எனவந்த வீர அன்னை!
காய்வார்த்தை தாய்வார்த்தை அல்ல; எங்கும்
கனிவுச்சொல் துணிவுச்சொல் பேசும் அன்னை!

'அன்னை' என வெளிவந்த ஏட்டின் அன்னை!
அண்ணாவின் வழியில்நடை போடும் அன்னை!
தன்னைத்தன் ஆற்றல்தனைக் கழகத் திற்கே
தந்துபுகழ் பெற்றுவரும் வெற்றி அன்னை!
'உன் உழைப்பு வேண்டும்! நீவேண்டாம்!'என்று
உதறுகின்ற அரசியலில் உதிர்ந்தி டாமல்
மின்னுகின்ற முழுநிலவாய் ஆன அன்னை!
மேன்மைநிலை மென்மைமனம்கொண்ட அன்னை!

எத்தனையோ போராட்டக் களத்தில் நின்றார்!
எண்ணற்ற முறைஇவரும் சிறைக்குச் சென்றார்!
எத்தர்களின் சூழ்ச்சியெல்லாம் எதிர்த்து வென்றார்)
இனமக்கள் இவரைத்தம் அன்னை என்றார்!
நித்திரையின் குறட்டையைச்சங் கீதம் என்று
நினைப்போமா? பெருமையிலார் தம்மைப் பற்றி
இத்தரையில் யார்நினைப்பார்? அன்னை யாரை
ஏற்றமிகப் பெற்றவரை யார்மறப்பார்?

எண்ணிக்கை சலித்துவிடும் கடலின் ஓரம்
இருக்கின்ற மணல்தூளை எண்ணப் போனால்!
எண்ணிக்கைக் கடங்காது விண்மீன் கூட்டம்!
இவற்றைப்போல் இவர்வாழ்நாள் பெருக
வேண்டும்!
அண்ணாவின் புகழ்இருக்கும் மட்டும் வானில்
அழகுநிலா செங்கதிரோன் உள்ள மட்டும்
தென்னாடு பாராட்ட அன்னை வாழ்க!
தேன்தமிழ்போல் புகழ்பெற்று வாழ்க! வாழ்க!

# தமிழ் காத்த தலைமகள்

கவிஞர் குடியரசு

மலருக்கோர் கவி வேண்டும் என்றார்! எந்த
மலருக்கு–பேரறிஞர் தாள்மலர்க்கா
நிலம்நாறும் தமிழ்மலர்க்கா என்று கேட்டேன்
நெஞ்செல்லாம் நிறைந்துவிட்ட அறிஞர்தங்கை
குலக்கொடியாம் சத்யவாணி முத்தென் கின்ற
கொள்கைமலர்ச் செண்டுக்குக் கவிதை ஒன்று
நலங்கனிய தேவையென்றார்! எனது நெஞ்சும்
நற்றமிழில் தேனெடுக்கப் பறந்த தங்கே!

பெண்ணுக்கு அரசியலா! தமிழின் பற்று!
பொதுவாழ்வா; சீர்த்திருத்தப் பணியா! பேச்சுச்
செண்டெடுத்து வீசுவதா! சமையற் கட்டுச்
செ[illegible]மங்கள் வரலாமா பொதுப்பணிக்கு
நண்டுக்கு வெளிவுலகம் தேவை தானா
நங்கையரின் சதங்கைமொழி நெருப்பா கக்கும்
என்றுசிலர் பேசிவந்த அந்த நாளில்
ஈரோட்டை நோக்கியவர் சத்ய வாணி!

பெரியாரின் பாதையென்றால் பூங்கா அல்ல
பெருநெருப்பு வேலியிட்ட பாதை; வஞ்ச
நரியாரின் வால்நறுக்கும் துணிச்சல், சாதி
நரம்புக்குச் சூடுதரும் எதிர்ப்புரட்சி
கொரித்தெடுக்கும் கோரைப்பல் மதத்தைத் தூக்கிக்
கொப்பரையில் குளிக்கவைக்கும் கடும்போ
ராட்டம்

நெரிஞ்சிமுள்ளில் நடக்கின்ற கட்டா யங்கள்
நெருக்கமாக இருப்பதுதான் பெரியார் பாதை!

இதுபோன்ற பாதையிலே பயணம் செய்தால்
இன்னலன்றி வேறொன்றும் கிடைக்கா தன்றோ
பொதுவாக ஆண்களுக்கே அச்சம் என்றால்
பெண்களுக்குச் சொல்லொண்ணுத் துன்பம் தானே!
எதுவரினும் தாங்குகின்ற இதயத் தோடு
எழுச்சியோடு சமுதாயப் பணியைச் செய்ய
பொதுவாழ்வில ஈடுபட்ட வீர மாதே
சத்யவாணி முத்தாவார்! பெருகி வாழ்க!

இல்லத்தைச் சுயநலத்தின் கூடாய் எண்ணி
இந்நாடே தன்வீடாய் தினமும் எண்ணிச்
செல்வங்கள் சுற்றத்தின் நலன்மறந்து
சுழல்விளக்குப் போலஒளி எங்கும் நல்கிக்
கொல்லவரும் சாதிமத வேலே! வாளே[ !
குறுநகையால் கூர்மழுக்கித் தன்மா னத்தை
எல்லையில்லாப் பகுத்தறிவை எடுத்துச் சொல்லி
இடர்ப்பாட்டை ஏற்றவர்தான் சத்ய வாணி!

அத்திப்பூப் பூத்ததைப்போல் கழகத் துள்ளே
அந்நாளில் பூத்தவர்தான் வாணி முத்து
நித்தமொரு கூட்டத்தில் தமிழ்மு ழக்கம்
நிகழ்த்தாமல் நித்திரைக்குச் சென்ற தில்லே
கத்திமுனை மீதிருந்து கத்திக் கத்திக்
கண்டத்தில் புண்பட்ட குயில்தான் வாணி
செத்தாலும் தமிழ்முழங்கிச் சாவேன் என்று
செந்தமிழைக் காத்ததலே மகளே வாணி!

தமிழ்ப்புலவன் எழுத்தாணி ஓலைப் பள்ளம்
தனிலிருக்கும் தமிழ்த்தேனே! குறள்பி ழிந்த

அமிழ்தத்தை! இலக்கியத்தின் பாசை வீர!
அனல்டுப்புப் புறப்பாட்டுத் தீக்கொ ழுந்தை
உமியுரித்துப் போடுதல்போல் உயிரு ரித்துப்
போடுகின்ற மானத்தை, உலகைப் பேணும்
திமிரில்லாப் பண்பாட்டை அயராத் தொண்டால்
தினங்காத்த தலைமகளே சத்ய வாணி!

கூடையிலே இருக்கின்ற பூவைப் பார்த்துக்
கூந்தலுக்கு ஆசைவரும் அந்த நாளில்
மேடையிலே தமிழ்த்தாயின் கருங்கூந் தற்கு
மேன்மைமிகு திருப்பூவாய்த் தானே ஆகி
ஆடையிலும் பகட்டினிலும் கவனம் நீக்கி
அரும்பசியின் தீத்தணிக்க நேரம் இன்றி
வாடையிலே வாடுகின்ற வாழ்க்கை வாழ்ந்து
வண்டமிழைக் காத்ததலை மகளே வாணி!

இருட்சாதி மதவெறியர் எதிர்ப்போர் பக்கம்
இம்மென்றால் சிறைசெய்யும் அரசோர் பக்கம்
வருமானம் வருமானால் தன்மா னத்தை
வட்டிக்கே அடமானம் வைத்து வாழும்
திருந்தாத கூட்டமொரு பக்கம், நாட்டைத்
திசைதிருப்பும் நேரத்தில் சிறைச்சா லைக்குக்
கருநிறைந்த வயிரோடு தமிழைக் காக்க,
கலங்காமல் சென்றதலை மகளே வாணி!

பெண்ணுயிற் றேளென்று மாட்டுக் கட்சி
பேயாட்சி இரக்கத்தைக் காட்ட வில்லை
அண்ணாவின் ஆணைப்படி அறப்போ ராட்ட
அணிவகுப்பில் அம்மையா ரும்க லந்தார்
அன்றுண்டோர் அம்மையாரைக் கைது செய்து
ஆள்நடமாட் டமில்லாத இடத்தில் விட்டுத்

திண்டாடச் செய்தார்கள் அதையும் தாங்கித்
தெள்ளுதமிழ்க் காத்ததலை தான்மகள் வாணி!

இவ்வாறு தியாகத்தின் தீயில் வெந்து
இன்னலுக்கும் இடருக்கும் தீனி யாகி
அவ்வையாரும் இளங்கோவும் செந்நாப் போதன்
அமுதா டித் தாலாட்டி உயிரை ஊட்டிச்
செவ்வையாக வளர்த்ததமிழ்ச் செல்வந் தன்னைச்
செரிக்காத இந்திமொழி சிதற டிக்க,
தெவ்வரினால் ஏவிவிடப் பட்ட போது
திருத்தமிழைக் காத்ததலை மகள்தான் வாணி!

அன்னாரின் பொன்னனை பிறந்த நாளில்
ஆற்றொழுக்காய் ஓடுகின்ற கவிதை நெஞ்சம்
பொன்னெழுத்தில் கவியெழுதிப் பாடக் கேட்பீர்
பூரித்த நலனெல்லாம் அம்மை யார்க்கு
அன்னாரிடம் வந்தெய்த வாழ்த்து கின்றேன்
அண்ணாவின் அருள்பாய்ந்து சிறக்க! வாழ்க
முன்னோடி யாயிருந்து சத்ய வாணி
முத்திரையைப் பதிக்கட்டும் தமிழ கத்தில்!

# வீரமகள்

**புலவர் புலமைப்பித்தன்**

முன்னேற்றக் கழகமெனும் பொய்கை பூத்த
முளரிமலர் நீ! அறிஞர் புனையும் மௌலி
தென்னாட்டுக் காந்தியெனும் அண்ணா கண்ட
தில்லைநகர் வள்ளியம்மை! புதுமை மங்கை
தன்னேற்றம் பாடவந்த பார திக்குத்
தமிழ்நெஞ்சில் கற்பனையின் உருவம் தந்த
துன்னாற்றல் வடிவம்தான்! கொள்கைக் குன்றில்
உயர்ந்தொளிரும் பெண்விளக்கு! சேலைச்சிங்கம்!
புறப்பாடல் நானூறும் இந்நூற் றாண்டில்
புனைந்துவந்த பெண்ணுருவம்! புலியெ திர்க்க
முறத்தோடு நின்றிருந்த தாய்வீ ரத்தின்
முத்திரைநீ! இதற்கெல்லாம், கழகம் கண்ட
அறப்போரில் அண்ணாவின் நடந்த உன்றன்
அடிச்சுவடு சான்றுரைக்கும்!சிறைகோட் டத்தில்
மறக்கோலத் தொடுநுழைந்த அம்மை! வீர
மகளென்று சாசனத்தில் பெயர்பொ றித்தாய்;
படைகொட்டும் முரசுக்குத் துடிக்கும் (இ)ரத்தப்
பாலூட்டும் தமிழ்த்தாயின் இனத்தி லேகால்
நடைகட்டும் தொழுவத்தில் கூட மக்கள்
நடமாடக் கூடாதென் றொதுக்கி வைத்த

கடைகெட்ட சமுதாயச் சாதிப் பேயைக்
கனலிட்டுப் பொசுக்கியகை உன்கை! பாயும்
மடைவிட்டுப் பாய்வதுபோல் தமிழ்ழ முக்கும்
மணிமலர்தான் நீபேசும் உருவாய் என்பேன்!

அடுப்பெரிக்கச் சுள்ளிகளை அள்ளிப் போடும்
அரிவையரும்சதைச்சுள்ளி இனந்தான் நாட்டை;
முடக்கவரும் மூடமதித் தனத்தை மாற்றும்
முன்னேற்றக் கழகப்பெண் புலிநீ! நெஞ்சில்
மடுக்கவந்த தமிழ்த்தேனின் மடை! நம் அண்ணு
மனதறிந்த இளந்தங்கை! என நிமிர்ந்து
நடக்கவந்தாய்! நீநடக்கும் நடையில் வீரம்
நடக்கட்டும்! மலரட்டும் புதிய வாழ்வு!

பூவேந்தி நடக்கின்ற தென்றல் போலும்
பொங்குதமிழ், மங்கையர்கள், சினந்தால்
மாற்ருர்
சாவேந்தி வருகின்ற புயலாய் மாறும்
சரித்திரங்கள் தொடர்வதெலாம் உன்னுல்!
உன்றன்
நாவேந்தும் சொல்லெல்லாம் பகைய ழிக்க
நாள்தோறும் யாம்ஏந்தும் தீப்பந் தங்கள்!
பாவேந்தன் கனல்பறக்கத் தமிழிற் பாடும்
பாவையெல்லாம் ஏந்திவந்த வீரப் பாவை!

போருக்குக் குழந்தையினை அனுப்பி வைத்துப்
புகழ்கொண்டாள் ஓரிளந்தாய்! பகைவெம்
போரில்
நேருக்கு நேர்நின்று பொருது பாய்ந்த
நெடுவேலால் வீழ்ந்தமகன் தன்னைக் கண்டு

பூரித்துப் புகழ்கொண்டாள் ஒருதாய்! அந்தப்
புகழ்எல்லாம் உன்புகழாய் ஆக்கிக் கொள்ளச்
சீருக்குள் தனிச்சீர்போல் செருவில் நின்று
சிறப்புக்குள் தனிச்சிறப்பு நீயே கொண்டாய்!

சத்தியத்தின் வாணியென்பார் உன்னை; வீரம்
சத்தியத்தின் இருப்பிடமாய் வாழ்வ தென்னும்
தத்துவத்தின் பொருள்விளக்கம் ஆனாய்! இன்பத்
தமிழ்ப்பகையாம் ஆதிக்கப் பெருங்க ளிற்றின்
மத்தகத்தைக் கிழித்தெறிந்தாய்! "மூதின் முல்லை"
மரபுநிலை நாட்டவந்தாய்! உனது வாழ்க்கைப்
புத்தகத்தின் ஏடெல்லாம் வீரம் சிந்தும்
போர்ப்பரணி காண்கின்றோம்! புகழோங் கட்டும்!

# சமூகத் தலைவி

மகாமதுரகவி முருகேச பாகவதர்
(செங்கை மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றத் தலைவர்)

சித்தார்த்தர் அறநெறியில் திளைத்த மேதை !
சீர்திருத்தச் செம்மல்திரு நாகை நாதர் !
உத்தமிநம் ஜானகியார் அருமைச் செல்வி !
உலகஒளி அம்பேத்கார் வாழ்த்து நேரில்
நத்து மாயி ரத்துத்தொள்ளா யிரத்து நாலில்
நாவினிக்கப் பாவினிக்கப் பெற்றீர் ! தேர்ந்த
முத்தைத்தமிழ்த் தென்றல் திரு.வி.க. வாழ்த்த
முறைமையொடு திருமணமே முடித்தீர், வாழ்க !

எங்களுடன் சமுகப்பணி ஆற்றி வந்த
எழில்முத்துக் கருமருந்தாய் இலங்கி வந்தீர் !
சங்கத்தமிழ்ப் புலவர்களைச் சமுகம் காத்த
தலைவர்களைத் தொண்டர்களை உபசரித்தீர் !
தங்கநிகர் ஜியார்ஜ்டவுன் பேட்டை இல்லில்
தண்கமல மலர்மொய்க்கும் சுரும்பாய் நாளும்,
எங்கிருந்தும் சமுகமக்கள் மொய்க்கும் காட்சி
என்றன்மனத் திரையில்நிழ லாடு கின்றும் !

தமிழகத்தின் ஆபிரகாம் லிங்கன் ஆன
தன்மானத் தந்தைதிருப் பெரியார் கண்ணின்
இமையனைய பேரறிஞர் அண்ணு கண்ட
ஈடியிணையில்லா அமைச்சர வையில் தாங்கள்
நமக்கெல்லாம் உணவுநல்க உயிரும் நல்க
நாளெல்லாம் ரத்தவேர்வை சிந்தி நாட்டில்
அமைதியிலார் கருணையிலார் நெஞ்சம் போன்ற
அருநிலத்தைக் கரம்சிவக்க உழுவார்க் கான

நல்லமைச்ச ராகத்திகழ் கின்றீர்! அன்னூர்
நலனுக்கே நெஞ்சமெனும் கழனி தன்னில்
சொல்லரிய பசுமைதவழ் கால மாரி
சொரிகின்றீர்! பசிப்பிணிக ளண்டா தோட்டி
எல்லையிலாத் திருப்பணியே ஆற்று கின்றீர்!
இன்றையநம் முதல்வர்உயர் கலைஞ ரான
கல்லக்குடி கொண்டாரும், கண்டு மெச்சும்
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டின் தலைவி வாழ்க!

அம்மட்டோ! தமிழ்மணக்கும் மதுரை நாட்டை
ஆட்சிசெய்தார், மங்கம்மாள் ராணி அன்றே!
அம்புவியும் வியக்கச்சிவ கங்கை ஆண்டார்,
அகிலாண்டேஸ்வரி நாச்சி யம்மை! பாயும்
சிம்மமெனப் பறங்கியர்தம் தலையைச் சீவிச்
சிறப்புற்றூர், வடநாட்டு ஜான்சி ராணி!
நம்முயிராம் தமிழ்காக்கச் சிறைத் துன்பத்தை
நகைமுகத்தோ டேற்ற அருந்தலைவி வாழ்க!

ஆகாச வாணிதன்னை மேலே தூக்கி
ஆகாசம் அனுப்பிவைத்தீர் ! கால மெல்லாம்
ஆகாச வாணிஎன்றே முழங்கி வந்த
ஆயிரமா யிரங்குரலை மாற்றிக் கேட்க
வாகான வானொலியென் றுரைக்கச் செய்தீர் !
மகத்தான வெற்றிகண்டீர் ? பண்டை நாளில்
ஆகம்மனம் மொழியினிக்கக் கணவ னுக்கே
அருமங்கையர்க் கரசி அமைச்ச ரானார் !

சீறிவந்த கொடும்புலியை முறத்தால் தாக்கும்
திருவீராங் கனைமரபில் உதித்து, நீதி
கூறிவந்த கலைவாணி அவ்வை பாட்டி
குலசத்திய வாணிமுத்து தங்கட் கின்று
பேறுநிறை ஓர்நாற்பத் தேழ்நல் லாண்டு
பிறந்தவிழாக் கண்டுமனம் பூரிக் கின்றும் !
ஏறுகின்றார் ஏற்றத்தில்; வாழ்வில் இன்றும்
ஏறாமல் குமுறுகின்றார் நமது மக்கள் !

வரட்சிநிலை கண்டுமனம் துடித்து மக்கள்
வடிக்கின்ற கண்ணீரைத் துடைத்தீர் ! மிக்க
புரட்சிமனப் பான்மையில் சீர் காணுகின் றீர்!
பொல்லாத்தீ வெள்ளத்தால் வீடி ழந்து
குரலெடுத்துக் கதறுகின்ற ஏழை மக்கள்
குறைநீக்க ஆவனசெய் கின்றீர் தேடி!
அரிசனநம் வேளாண்மைத் தொழிலா ளர்க்கே
அணைபோன்ற எம்சமுகத் தலைவி வாழ்க!

மருத்துவத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்றீர்! மக்கள்
மனப்பிணியை உடற்பிணியைத் தவிர்க்கின்றீர்! சீர்
திருத்தமருந் தளிக்கின்றீர்! பண்பு மிக்க
தென்னகத்து மாதர்குல மணியே நீவிர்!
கருத்துநிறை சொற்பொழிவால் மாந்தர் நெஞ்சைக்
காந்தம்போல் ஈர்க்கின்றீர்! தமிழ கத்தின்
சரித்திரத்தில் நிலையான இடமே பெற்றீர்!
சமுகநலத் தலைவிநினை வாழ்த்து கின்றோம்!

நனிபடர்ந்து தண்ணிழலைக் கால்ந டைக்கும்,
நம்மனித இனத்திற்கும் நல்கி, பட்சி
இனங்கட்கும் பழஉணவும் வழங்கி, காட்சிக்
கிருப்பிடமாய் அமைந்துநகர் நடுவே நின்று
கனிகுலுங்கிக் கம்பீர ஆல்போல் காணும்
கவின்மிக்க தாயனையீர்! விழுது போன்ற
தனயர்பலர் இங்குள்ளார், உம்மைத் தாங்க!
தாழ்த்தப்பட்டார் சமுகநலத் தலைவி வாழ்க!

இமிழ்கடலைக் கடந்துபிற மேனாடேகி
ஈங்குள்ள ஆங்குள்ள நிலையைக் கண்டீர்!
சமுகஅர சியல்பொருளா தாரம் மற்றும்
சார்ந்தகல்வி உண்டிஉடை உறையுள் தந்து
தமரரெனக் கருதிஇன்னார் வாழ்வில் மாற்றம்
தழைக்கச் செய்வீர் எனநம்பு கின்றோம், அம்மா!
அமரர் அண்ணா திருப்பெயரால் வாழ்த்துகின்றோம்!
ஆதிசமு கத்தலைவிதமிழ் போல் வாழ்க!

# குலமகள்

கவிஞர் ஆனந்தம்

புறநானூற்றுப் பொற்கவி யானவர்;
திறன்மிகக் கொண்டவர்; தெளிதமிழ் தந்தவர்;
திருக்குறள் நெறியில் சிறந்தவர்; தேர்ந்தவர்!
நீதிநூல் போன்றவர், நெஞ்சில் நிலைத்தவர்;
தமிழ்நிலம் தன்னில் சீரிய்க்குலத் தோகையர்
அந்த நாள் முதலாய் அநேகர்! அநேகர்!
ஆதிநாள் ஔவை அதியனுக் காகத்
தொண்டை யனிடைத் தூதாய் நடந்தே
அண்டிய பகையை அறிவால் வென்றவர்!
ஆனால் ஆட்சியில் அமைச்சராய் அமர்ந்து
நாடும், வீடும், நலமும் சிறக்க
பாடு புகழ்பெறும் பாங்கியர் இல்லை
எனும்குறை அகல இன்றுளார் ஒருவர்!
பகுத்தறி வியக்கப் பண்பில் திளைத்தவர்;
வகுத்த பெரியார் வழிதனில் வந்தவர்;
அருந்தமிழ் காக்க அழிசிறை சென்றனார்!
தன்னேற்றமில்லாத் தமிழர் வாழ்வு
முன்னேற் றம்பெற முனைந்தநாள் தொட்டு
முன்னேற்றக் கழகமே இவர்க்கு மூச்சாம்!
அண்ணாவின் மொழியே ஆணிப் பொன்னும்!
மகளிர் மன்ற மாண்பும் இவர்தாம்!
தமிழ்நா இவர்நா! தனிநா அதுவாம்!

பழுத்த எழுத்தைப் பக்குவச் சுவையொடு
தருவதில் வல்ல தாய்க்குலப் பெண்ணிவர்!
குடிமகள் ஔவை மொழிமகள் என்றால்
கொள்கைத் திருமகள் இவரோ தலைமகள்
ஆவார்! நிலமகள் போன்ற நல்மகள்!
நீள்புகழ் அண்ணா, கலைஞர் ஆட்சியில்
ஓர்மகள் அன்றோ! அதுவே போதும்
சத்திய வாணியாம் சற்குண வதிக்குப்
பிறந்தநாள் வேறு பெறுதலே மகிழ்ச்சி!
இத்தரை மீதினில் இவர்நாள், நல்ல
முத்திரைத் திருநாள் ஆதலால்
சந்துறை தமிழால் வாழ்த்துவன் வாழ்கவே!

~~~~~~
~~~~~~





ஜகஜீவன்ராமும் அன்னையும்